# வடக்கு மாகாணத்தில் COVID 19 தொற்றும் அதனை கையாள்வதிலுள்ள சவால்களும்

# COVID 19 Infection and Challange to control in Northern Province

வைத்திய கலாநிதி.

இ.சுரேந்திரகுமாரன்

| | | |
|---|---|---|
| தொகுப்பாளர் | : | வைத்தியர் இ.சுரேந்திரகுமரன். |
| வெளியீடு | : | 2020, புரட்டாதி. |
| நூலின் பெயர் | : | வடக்கு மாகாணத்தில் COVID 19 தொற்றும் அதனை கையாள்வதிலுள்ள சவால்களும். |
| புத்தக அளவு | : | A5 |
| அச்சுப்பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ்.<br>இல 39/2, ஆடியபாதம் வீதி,<br>திருநெல்வேலி. |
| ISBN NO | : | 978-624-5595-05-1 |

# முன்னுரை

உலகலாவிய ரீதியில் இன்று முழு உலகையும் ஆட்டிப் படைக்கும் கொரோனா நோய் (COVID 19) ஆனது மிகவும் வேகமாக பரவும் நோய் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இதன் வேகமான பரம்பல் அது ஏன் எப்படி எவ்வாறு பரவுகின்றது என்பது பற்றிய விஞ்ஞான ரீதியான காரணங்களை தற்பொழுது நாம் விரிவாக பார்க்கவேண்டிய சூழ்நிலையில் உள்ளோம். இந் நூலில் இலங்கையின் வடமாகாணத்தில் தற்போதைய நிலமையைப் பற்றியும் அதன் தாற்பரியங்கள் பற்றியும் என்னால் ஊடகங்களுக்கு நெருக்கடிமிக்க சூழலில் காலத்தின் தேவையறிந்து பொது நோக்கில் 2020ம் ஆண்டு மாசி மாதத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளை தொகுத்து இந்நூலினை வெளியிடுகின்றேன்.

கோவிட் - 19 என்ற கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் நாம் போராடிக் கொண்டிருக்கின்றோம். இப் புதிய வைரஸ் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு மற்றும் அது தொடர்பான தகவல்களை வழங்குவது என்பது முக்கியமான ஒரு விடயமாகும். இத் தொற்றானது எந்நேரத்திலும் யாருக்கும் தொற்றக்கூடிய ஒரு நோயாகும். இது தொடர்பானத் தாக்கங்களை அறிந்து வைத்திருத்தல் ஒவ்வொரு தனி நபரினதும் முக்கிய கடமையும் பொறுப்புமாகும்.

இ. சுரேந்திர குமாரன்

**பொருளடக்கம்**

*1.* வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றும் அதனை கையாள்வதில் உள்ள சவால்களும் *01*

*2.* வடக்கில் கொரோனா கட்டுப்படுத்தில் காத்திருக்கும் சவால்கள் *06*

*3.* வடக்கில் கொரோனா வைரசு கட்டுப்பாட்டை தொடர் வதில் உள்ள சவால்களும் அவற்றை கையாளுதலும் *11*

*4.* வடக்கில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையும் இயல்பு வாழ்க்கையும் *16*

*5.* வடமாகாணத்தில் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான ஒரு பார்வை *21*

*6.* கொரோனாவுடனான புதிய இயல்பு வாழ்க்கையும் வடமாகாணமும் *28*

*7.* வடக்கின் கொரோனா தொற்றை கட்டுப் படுத்துவதில் உள்ள சவால்கள் *34*

*8.* கொரோனாவின் இரண்டாவது அவஸ்த்தையும் வடமாகாணமும் *38*

*9.* வடக்கின் இரண்டாவது அலை பீதியும் கொரோனா தடுப்பும் *42*

*10.* கொரோனாவின் தொடர் தாக்கமும் வடமாகாணமும் *45*

*11.* வடக்கு மக்களை விழிப்புடன் இருக்க வலியுறுத்தும் நாட்டின் அண்மைய கொரோனா தொற்று *50*

*12.* கொரோனாவிற்கு பின்னரான புதிய இயல்பு வாழ்க்கையும் வடமாகாணமும் *54*

*13.* மக்களின் நடத்தைப்பாங்கு மாற்றமும் வடக்கின் கொரோனா கட்டுப்பாடும் *59*

# 01 வடக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றும் அதனை கையாள்வதில் உள்ள சவால்களும்

இலங்கையை பொறுத்தவரை கடந்த இரு வாரத்தில் கூடுதலான கொரோனவால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் அனேக மானவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் அடையாளம் காணப்பட்டதுடன் அவர்களில் அனேகமானவர்கள் அறிகுறிகள் அற்று கிராமமான பரிசோதனைகளின் ஊடாக கண்டுபிடிக்கப் பட்டவர்கள் என்பதை இலங்கையின் சுகாதார அமைச்சின் தரவுகளில் இருந்து அறியமுடிகிறது. கிட்டதட்ட எண்ணூறு நோயாளிகளில் ஒன்பது நோயாளிகள் மரணிக்க நேர்ந்ததையும் அவதானிக்க முடிகின்றது. நோயுடையவர்களை ஆரம்பகாலத்தில் கண்டறிவதால் அனேகமான நோயாளிகள் நோயின் பாரதூர விளைவுகள் அற்று வெளிவரக்கூடியதாக இருப்பதுடன் சமூகத்தில் நோய் வேகமாக பரம்பி சமூக பரம்பல் ஏற்படாது தவிர்க்க முடிகிறது. இது மேலும் சகலரையும் வைத்திய சாலைகளில் வைத்து பராமரிக்க கூடியதாக உள்ளது.

இவ் விடையங்களை உலகலாவிய நிலையுடன் ஒப்பிடு கையில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தாலும் சிறிது ஆறுதல் அளிக்கக்கூடியதாக இருந்தாலும், இன்னும் சவால்கள் உள்ளன என்பதை மறந்துவிட முடியாது. இன்னும் ஆபத்து கூடிய பிரதேசங்களில் ஊரடங்கு சட்டம் தொடர்ந்து அமுலில் இருப்பதுடன் பல சமூக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில்தான் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. இவ் பொதுசுகாதார நடவடிக்கைகள் நடைமுறையில் இருக்கையில் நோயை கட்டுப்படுத்த முடிந்தாலும் எவ்வளவு காலத்திற்கு இவ் நடவடிக்கைகளை நடைமுறையில் வைத்திருக்க முடியும். இது இன்று ஒரு உலகலாவிய கேள்வியாகவும் காணப்படுகின்றது. பல

நாடுகள் தங்களுடைய பொதுசுகாதார நடவடிக்கைகளை தளர்த்தி மீண்டும் பொருளாதார நடவடிக்கைகளை ஆரம்பிக்க முயற்சிக் கின்றன. இனிவரும் நாட்கள் பரீட்சார்த்தம் நிறைந்தவையாக அமையவுள்ளன. வைரசுடன் வாழும் ஏதிர்காலத்தை பற்றிய பரீட்சார்தத்தை செய்து பார்ப்பதற்கு நாம் எல்லோரும் தயாராகி றோம். இதற்கு இலங்கையும் விதிவிலக்காக அமையவில்லை. வெளிவரும் தகவல்களின்படி பல பொதுசுகாதார நடவடிக்கைகள் 2020ஆம் ஆண்டு மே 11 இல் இருந்து தளர்த்தி வைரசுடன் வாழும் வாழ்கையின் சவால்களை அறிய அரச மட்டத்தில் தீர்மானித் துள்ளதை ஊடகங் களின் ஊடக அறிய முடிகின்றது.

எனவே எதிர்வரும் நாட்கள் எமக்கு சவாலானதாக அமைய உள்ளதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் நாம் இதனை ஒருநாள் செய்து பார்க்கத்தான் வேண்டும். எந்த பரிசோதனையை செய்யும் போதும் நாம் தயார் நிலையில் இருப்பது முக்கியம். அத்துடன் சில பரீட்சாத்த நடவடிக்கைகளை படிப்படியாக செய்தும் பார்த்தல் விபரீதத்தை குறைக்க வழிவகுக்கும். இதனை கூறுவது சுலபம் ஆனால் நடைமுறைபடுத்தல் மிகவும் கடினம். கொரோனா போன்ற புதுவகை வைரசின் தன்மைகள் அதன் பழக்கவழக்கங்கள் பற்றி இன்னும் தேவையான தவகல்கள் கிடைக்காத தருணத்தில் அதனை கையால்வதுடன் பொருளாதார நடவடிக்கைகளை முன்னெ டுப்பதும் மிகவும் கடினமானது.

இலங்கையில் கொரோன தொற்று அதிகரித்து காணப் பட்ட போதிலும், வடமாகாணத்தில் அதன் தாக்கமானது கடந்த வாரங்கள் போன்றே காணப்பட்டது. தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டுக்கொண்டு இருந்தன. வைரசின் பரம்பல் பற்றிய கண்காணிப்பு பலமட்டத்தில் தொடர்ந்து கொண்டு இருந்தன. மாகாணத்தினுள் வைரஸ் உள்நுழைவதை தவிர்ப்பது தான் பிரதான மூலோபாயமாக காணப்படுகின்றது. எனவே மாகாணத்தினுள் வைரசை உள்ளே கொண்டுவரக்கூடிய மூலங் களை கண்காணிப்பதுடன் தேவையான தகவல்கள் சேமிக்கப்பட்டு

வந்ததுடன் தேவைக்குஏற்ப பரிசோதனைகளும் செய்யப்பட்டன . அத்துடன் பொதுமக்கள் அதிகளவு கூடக்கூடிய பொதுச்சந்தைகள் வழிபாட்டுத் தளங்கள் போன்ற இடங்களின் தொழிற்பாடுகள் மாற்றி அமைக்கபட்ட முறையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெற்று வந்தன. ஒரு மாவட்டத்தில் இருந்து இன்னொரு மாவட்டத்துக்கு அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் செல்லும் நடவடிக்கைகள் மாத்திரம் நடைமுறையில் காணப்பட்டது. வடமாகாணத்தில் இருந்து வெளிச்செல்லும் பாரவூர்திகளை பதிவு செய்து விஷேட அனுமதி பத்திரத்துடன் செல்லும் நடவடிக் கைகள் காணப்பட்டது. ஒருசிலர் இவ் நடவடிக்கைகளை பற்றிய விமர்சனங்களை முன்வைத்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது. பாரவூர்திகளுக்கான விசேட அனுமதி பத்திரம் வடக்கில் மட்டும் நடைமுறை படுத்தபடுவதாக ஆதங்கம் தெரிவிக்கப்பட்டது. இவ் நடவடிக்கைகள் அனைத்தும் மேலே குறிப்பிட்டது போன்று வைரசை உள்நுழையாது வைத்திருப்பதற்கும் தவறுதலாக வைரசு ஒருவரினால் கொண்டுவரப்பட்டால் அதற்குரிய நடவடிக் கைகளை துரிதமாக செய்து சமூக பரம்பல் ஏற்படுவதை தவிர்ப்பதற்கானது. இதில் சிரமங்கள் இருந்தாலும் இதனைப் பற்றிய காரணத்தை உணர்ந்து தடுப்பு நடவடிக்கைகளுக்கு உதவிசெய்தல் சமூகக் கடமையாகும். அதேபோல் சந்தைகளை திறக்கவேண்டும் என்ற வாதங்களும் வைக்கப்படுவதையும் அறியக்கூடியதாக இருந்தது. சந்தைகள் போன்ற பெருமளவு மக்கள் கூடும் இடங்கள் எவ்வாறு வைரசு தோற்ற காரணமாக இருந்தன என்பது பலரும் அறிந்ததே. இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள பெரிய சந்தை ஒன்று எவ்வாறு வைரசு பரம்ப காரணம் ஆனது என்பது எல்லோரும் அறிந்த விடையமாகும்.

வடக்கில் இன்று காணப்படும் மிகப்பெரிய சவால் என்னவெனில் இன்னும் மக்கள் சமூக இடைவெளியை கடைபிடிக்க தயங்குவதுதான். பொது இடங்களில் கூடும்போது அதனை கூடுதலாக மறந்துவிடுவதுடன் அதைப்பற்றிய சுயகவனத்தை தாமே கைக்கொள்வது மிகவும் அவசியமானது. இன்னொரு பிழையான

கருத்துப்பாடும் அதிகமான மக்களிடம் காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. அதாவது முகக்கவசம் அணிந்தால் சமூக இடைவெளி தேவையில்லை என்பதாகும். இது மிகவும் பிழை யானது. ஏனெனில் நாம் அணியும் முகக்கவசம் ஆனது சரியான பாதுகாப்பை தரக்கூடியதாகவும் சரியான முறையிலும் அணியப்படு வதில்லை. எனவே சகல தடுப்பு நடவடிக்கைகளையும் கைக்கொள்வது மிகவும் அவசியமானது.

மேலே குறிப்பிட்ட து போன்று இலங்கை பொருளாதார நடவடிக்கைகளுக்காக அடுத்த வாரம் பொதுசுகாதார நடவ டிக்கைகளை தளர்த்தும் பரீட்சாத்த நடவடிக்கையில் இறங்க வுள்ளது. இதனால் நாட்டில் ஆபத்துகூடிய பிரதேசத்திலும் சில நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன இது சிலவேளைகளில் நாட்டில் நோய் பரம்பலின் அளவை சிறுதளவு கூட்டக்கூடும் அல்லது பிரதேச ரீதியான நோய் பரம்பலில் மாற்றத்தை கொண்டுவரக்கூடும், ஆபத்து வரக்கூடும் என்ற வகையில் விடையங்களை கையாளுதல் மிகவும் முக்கியமானது. எனவே நோய் பரம்பல் அதிகமற்ற வடமாகாணத்தில் இதனை கருத்தில் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் இன்றியமையாதது. எனவே ஏற்கனவே இருந்த நடவடிக்கைகளை படிப்படியாக தளர்த்துவதுடன் நோய்யேற்படக்கூடிய ஆபத்துகளை முன் கூட்டியே அறிந்து அதனை தடுப்பதுடன் நோய் ஏற்படுத்தக்கூடிய மூலங்களை விரைவாக கண்டு பிடிக்க கண்காணிப்பு நடவடிக் கைகளை விஞ்ஞானரீதியாக கைக்கொள்ளுதல் அவசியமான தாகும். இதற்கு சகல தரப்பினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசிய மானது. ஒவ்வொருவரும் தமது பணியை உணர்ந்து செயற்படுவது இந்த வைரசின் தாக்கத்தில் எம்மை பாதுகாத்துக்கொள்ள உதவும்.

நாம் பொதுவாக பல்வேறுபட்ட ஆர்வத்தையும் இலக்கு களையும் கொண்டு இயங்கிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் தற்காலமானது எல்லோரும் பொது இலக்குடன் செயற்பட

வேண்டிய தேவையை உணர்த்தியுள்ளது. அதுவென்னவெனில் நாம் எல்லோரும் இணைந்து இவ் வைரசின் தாக்கத்தில் இருந்து எம்மை பாதுகாத்து மற்றைய இலக்குகளை அடைய கூடிய காலத்தை விரைவில் ஏற்படுத்திகொள்வதாகும்.

எனவே நாம் எல்லோரும் வைரசு பரம்பலை தடுப்பதற்கான நடவடிக்கைகளை சரியாக மருத்துவத்துறையின் அறிவுறுத் தலுக்கு ஏற்ப கடைபிடித்தல் எம்மை தேவையற்ற வீண் உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதை தவிர்த்துக்கொள்ள உதவும்.

எனவே தேவையின்றி வெளியே செல்வதை தவிர்ப்பதுடன் வெளியே செல்லும் போது தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகளை கைக்கொள்வதுடன், நோய் சம்பந்தமான அறிகுறிகள் ஏற்படு கையில் உடனடியாக மருத்துவ உதவியை நாடி பொறுப்புள்ள பிரசைகளாக நடந்துகொள்வதன் ஊடாக நம் எல்லோரும் ஆபத்தில் இருந்து விடுபட முடியும்.

# 02 வடக்கில் கொரோனா கட்டுப்படுத்தலும் காத்திருக்கும் சவால்களும்

*உலகலாவிய ரீதியாக கொரோனா தொற்றானது தனது வீரியத்தில் சற்றும் சளைக்காது தொடர்ந்து கொண்டு இருப்பது ஒரு மிகப்பெரிய சவாலாகும். ஒரு சில நாட்களாக புதிதாக பதிவு செய்யப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையிலும் இறப்புகளின் எண்ணிக்கையில் ஒரு தொய்வு காணப்பட்ட போதும் தற்போது மீண்டும் அண்ணளவாக ஒரு லட்ஷம் புதிய நோயாளர்கள் பதிவு செய்யப்படுவதும் கிட்டதட்ட ஐயாயிரம் இறப்புகள் உலகளாவிய ரீதியாக பதிவு செய்யப்படுவதினை அவதானிக்கமுடிகிறது. உலக ளாவிய ரீதியாக சிலநாடுகளில் தாக்கம் குறைவதும் சிலநாடுகளில் புதிதாக பதிவு செய்யப்படுவது ஒரு நாளாந்த செயற்பாடாக மாறிவிட்டது . இதில் ஒரு மாற்றம் வராதா என முழு உலகம் ஏங்குவ துடன் தமது அன்றாட பொருளாதார நடவடிக்கைகளை இயன் றளவு ஆரம்பிக்க விளைகின்றனர். இது உலகிற்கு ஒரு சவாலான காலமாகும்.*

*இலங்கையின் நிலமையும் இன்னும் சிக்கலான நிலைமை யில்தான் காணப்படுகின்றன. நோயாளர்கள் தடுப்பு முகாம்களில் மாத்திரம் கண்டுபிடிக்கப்படுவதும் சமூகத்தில் கடந்த இருபது நாட்களுக்கு மேல் புதிய ஒரு நோயாளி அடையாளப் படுத்தப்படா மையும் ஆறுதலான விடயமாக இருந்தாலும் ஒரு நாளில் கண்டுபிடிக்கப்படும் நோயாளிகளின் அளவில் ஒரு சடுதியான அதிகரிப்பானது நாட்டில் தொற்றாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க செய்வதுடன் அவர்களை பராமரிக்க வேண்டிய மருத்துவ சேவைகள் மற்றும் ஏனைய வளங்களின் தேவை அதிகரிப்பதுடன் நாட்டில் நிலவும் ஆபத்து தன்மையினை அதிகரிக்கிறது. நான் கடந்த வாரம் குறிப்பிட்டது போன்று ஒருதடவையில் சிகிச்சை அளிக்கப்படும் நோயாளர்களின்*

எண்ணிக்கையானது பொதுவாக நானூறுக்கும் ஐநூறுக்கும் இடையில் காணப்பட்டது. ஆனால் தற்போது அது எழுநூறை தாண்டியிருப்பதால் புதிதாக சில சிகிச்சை அளிக்கும் நிலையங்களை ஆரம்பிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இதில் அறிகுறிக ளுடன் காணப்படுபவர்களின் எண்ணிக்கையும் குறிப்பிடக்கூடிய அளவில் காணப்படுகின்றது. இவற்றில் கிட்டதட்ட முந்நூறு நோயாளர்கள் வெளி நாட்டில் இருந்து வந்தவர்கள். இன்னும் பலர் வெளியில் இருந்து இங்கு வரவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இவர்கள் படிப்படியாக நாட்டினுள் வரும்போது ஏற்படக்கூடிய ஆபத்தானது தீவிர கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

இதனை கையாளும் பொழுது நாட்டில் பொதுவாக மக்களின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டு இவ் ஆபத்துகளை கடந்து செல்ல அவர்களின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் மிகவும் இன்றியமையாதது. அத்துடன் நாட்டின் பொருளாரத்தை மேலும் நலிவடையாது பாதுகாப்பதும் முக்கியமானது. இதன் அடிப்ப டையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் அதன் விளைவு களும் சரியான திசையில் பயணிப்பதில் சிக்கல் நிலைமை தொடர்ந்து காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. இதன் காரண காரியங்களை ஒரு சில உதாரணங்களுடன் பார்ப்போம்.

பொருளாதார நடவடிக்கைகளுக்கு பொது போக்குவரத்து ஒரு முக்கியமான விடயமாகும். இலங்கையை பொறுத்தவரை பொது போக்குவரத்து சேவையை அரச போக்குவரத்து நிறுவனமும் தனியார் போக்குவரத்து சங்கங்களும் வழங்குகின்றனர். இவர்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்று வழிகாட்டுதல்கள் சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது. அதனைக் கடைப் பிடிப்பதில் போக்குவரத்து சேவை வழங்குநர்களும் மக்களும் தமது பொறுப்பை உணர்ந்து செயற்படுகிறார்களா? என்பது ஒரு கேள்விக்குறியாக காணப்படுகின்றது. பல பயணிகள் போக்குவரத்து வாகனங்கள் கொரோனா தொற்றுக்கு முன்னரான காலத்தில் எவ்வாறு பயணிகளை அடைத்து ஏற்றி சென்றார்களோ அதே

போன்று தற்போதும் ஏற்றிச் செல்வதை அவதானிக்க முடிவதுடன் அவ்வாறான போக்குவரத்தில் மக்களும் எதுவித தயக்கமும் இன்றி பயணிப்பதுடன் அதனை பற்றி கவலை இன்றி செயற்படுவதும் இருதரப்பினரும் வரப்போகும் ஆபத்தை சிறிதளவும் எண்ணாது செயற்படுவது அவர்களின் அறிவீனம் என்பதை விட இது ஒரு அசண்டையினமாக கருதவேண்டியுள்ளது.

இன்றைய நிலைமையில் சகலரும் கொரோனா தொற்று அதன் ஆபத்து அதன் நிலவரம் என்பவற்றை ஓரளவேனும் அறிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் தேவைகள் என வரும்போது அவ் அறிவையும் ஏற்படக்கூடிய ஆபத்துகளை விலத்திவைத்துவிட்டு செயற்படும் ஒருநிலையானது சமூகத்தில் பழக்கத்திற்கு வந்து விட்டது. அதனை கொரோனா போன்ற பாரிய தொற்றுநோயின் தாக்கத்தின் போதாவது மாற்றுவதற்கு நாம் இன்னும் தயாராக இல்லை என்பதை இவ் நடவடிக்கைகள் எடுத்து காண்டுகின்றன. நம்மிடம் உள்ள வினா என்னவெனில் நாம் இதனை இப்படியே விட்டுவிட்டு ஒவ்வொரு நாளும் ஏற்படும் இழப்புகளை பார்த்து பழக்கப்பட போகிறோமா அல்லது ஏதோவிதத்தில் சமூகத்தில் மாற்றத்தை கொண்டுவரப் போகின்றோமா என்பதே ஆகும். சகல பொறுப்புள்ளவர்களும் தம்மை தாமே கேட்கவேண்டிய விடையமாகும். சமூகத்தில் நடத்தை மாற்றத்தை உடனடியாக கொண்டுவரமுடியாது. அதற்கு பலவழிகளில் பல்வேறு தரப்பால் தெடர்ந்து தூண்டல்களை வழங்கிக்கொண்டிருத்தல் மிகவும் அவசியமானது. இதனை விடுத்து நாமெல்லோரும் இவர்களை மாற்றமுடியாது என நழுவிவிடமுடியாது.

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை கொரோனா தொற்று தடுப்பில் நான் மேலே குறிப்பிட்டது போன்ற பல சவால்கள் காணப்படுகின்றன. இவ் வாரம் மாகாணங்களுக் கிடையிலான போக்குவரத்தானது அனுமதிக்கப்பட்ட பின்னர் பலரும் பொதுப்போக்குவரத்தின் மூலம் நடமாட தொடங்கியுள் ளனர். பலர் இங்கிருந்து வெளியே செல்வதும் பொதுவாக ஆபத்து

கூடிய பிரசேதங்களிற்கு தேவைகளுக்காக சென்றுவருவதும் அதிகரித்துள்ளது. இது ஏற்கனவே தொற்றுக்கிருமி பரவல் நீண்ட காலமாக இருக்கும் பிரதேசத்தினுள் தொற்று கிருமியை கொண்டு வரக்கூடிய சாத்தியக்கூறுகளை அதிகரிக்க செய்கிறது. அத்துடன் இதில் ஒருவர் தொற்று உடையவராக கண்டுபிடிக்கப்பட்டால் அவருடன் தொடர்பில் யார் யார் இருந்தார்கள் என்ற விடையத்தை கண்டறிதல் மிகவும் கடினமாக அமையும். எனவே ஏதோவொரு வகையில் இயன்றளவு சமூக இடைவெளியை பேணுதல் மிகவும் அவசியமானது. ஆனால் மக்கள் சமூகத்தொற்று இல்லை எனக் கூறியவுடன் எந்நேரத்திலும் ஆபத்தானது யார்மூலமாகவோ அவரை அறியாமல் பரவமுடியும் என்பதை கவனத்தில் எடுக்க மறுக்கிறார்கள். ஆனால் இவ்விடையத்தை மக்களிடம் கொண்டுசெல்லவேண்டிய கடமை ஊடகங்களிட்கு உண்டு.

அத்துடன் குளிரூட்டப்பட்ட சொகுசுபஸ்களும் தமது சேவைகளை ஆரம்பித்துள்ளன. இதில் பயணிக்கும்போது பயணிக்களுக்கான தொற்று ஏட்படக்கூடிய ஆபத்து கூடுதலானது. தொற்றுள்ள ஒருவர் பயணத்தில் ஈடுபடும்போது அவ் தொற்றானது அவருடன் பயணிக்கும் பலருக்கும் தொற்றை பரவச்செய்யும். எனவே இவ்வாறான போக்குவரத்தில் ஈடுபடும் மக்களது விபரங்களை அவ் சேவையை வழங்குபவர்கள் சமூகப்பொறுப்புடன் பதிவு செய்து வைத்திருத்தலுடன் தொற்று ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு உள்ளவர்கள் இவ்வாறான போக்குவரத்துக்களை தவிர்த்தல் நன்று.

வடமாகாணத்தில் பல்வேறு சேவைகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளதால் அதனுடன் தொடர்புபட்ட பலர் இங்கு வருவதும் போவதும் அதிகரித்துள்ளது. இது தவிர்க்க முடியாத ஒன்று. ஆனால் கொரோனா தொற்று ஆபத்து இன்னும் எம்மை விட்டு அகலவில்லை என்பதை சகலரும் மனதிலிருத்தி எப்போதும் தொற்று ஏற்படலாம் என்ற வகையில் எம்மை எச்சரிக்கையுடன் வைத்திருப்பதுடன் தேவையான சகல முன்னெச்சரிக்கை

நடவடிக்கைகளை வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய கடைப்பிடித்தல் காலத்தின் தேவையாகும்.

இதனை விடுத்து இவ் வழிகாட்டல்கள், எமது பொருளாதாரத்தை பாதிக்கின்றது எம்முடைய சுதந்திரமான நடமாட்டத்தை பாதிக்கின்றது என நேர்மறையாக எண்ணி செயற்படுதல் மிகவும் ஆபத்தானது.

இன்று நாமெல்லோரினதும் கடமை என்னவெனில் இவ்வாறான நடவடிக்கைகளை கைக்கொள்வதுடன் அவ் நடவடிக் கைகளை கைக்கொள்ள தவறுபவர்களை அவ்வாறு செயற்பட வேண்டாம் என அறிவுறுத்துவதுடன் தேவையேற்படின் அவர் களை தண்டனைக்கு உட்படுத்தவேண்டிய நடவடிக்கைகளுக்கு உதவுதல் வேண்டும். ஏதோருவிடத்தில் மக்கள் தேவையின்றி அதிகமாக சரியான நடவடிக்கைகளை கைக்கொள்ளாது கூடுவார் களானல் அதுபற்றிய தகவல்களை பொலிசாருக்கோ அல்லது பொதுசுகாதார துறையினருக்கோ அறியத்தருதல் எம் எல்லோ ரையும் ஆபத்தில் இருந்து பாதுகாக்க உதவும்.

எனவே வடமாகாணத்தை பொறுத்தவரை நீண்டகாலமாக நோயாளர்கள் அற்ற நிலைமை தொடர்ந்து காணப்பட்டாலும் தொற்றானது எந்நேரத்திலும் கொண்டுவரக்கூடிய ஆபத்துகள் உள்ளது என்றவகையில் செயற்படுதல் மிகவும் அவசியமானது தான் காலத்தின் தேவையுமாகும். இதனை சகல தரப்பினரும் மனதில் இருத்தி செயற்படுதல் வேண்டும்.

# 03 வடக்கில் கொரோனா வைரசு கட்டுப்பாட்டை தொடர்வதில் உள்ள சவால்களும் அவற்றை கையாளுதலும்

உலகளாவிய ரீதியாக கொரோனாவின் தாக்கம் ஓரளவு குறைந்து வருவதான தோற்றம் காணப்பட்ட போதிலும் அதன் தாக்கம் பிரேசில், ரஷிய போன்ற நாடுகளில் கூடுதலாக காணப்ப டுவதை இவ் வாரத்தில் காணக்கூடியதாக உள்ளது. இன்னும் இதன் தாக்கம் ஆனது தொடர்வதனை அவதானிக்க முடிவதுடன் ஏற்க னவே குறிப்பிட்டவாறு சிங்கப்பூர், தென்கொரியா போன்ற வற்றில் எற்பட்ட நிலைமையும் கவலை தரக்கூடிய விடயங்களாக உள்ளன. அத்துடன் உலகளாவிய ரீதியாக தெரிவிக்கப்படும் சமூகப் பொருளாதார பிரச்சனைகளும் கவலையளிக்கக் கூடியனவாகக் காணப்படுகின்றன. அமெரிக்காவை பொறுத்தவரை கிட்டதட்ட இலங்கை மொத்த சனத்தொகையின் ஒன்றரை மடங்கு மேலான மக்கள் இக் கொரோனா தொற்றால் வேலை இழந்ததாக அறிவித் துள்ளனர். இவ் பிரச்சனை உலகளாவிய ஒரு சவாலான விடையமாக இனிவரும் வாரங்களில் காணப்படும் என்பதில் ஐயமில்லை. இதனால் ஏற்படபோகும் சமூகப்பொருளாதார பிரச்சனை மட்டு மன்றி நோய்களின் தாக்கமும் கருத்தில் கொள்ளப் பட வேண்டியவை.

இலங்கையை பொறுத்தவரை நோயாளர்களின் எண் ணிக்கை ஆயிரத்தை தாண்டினாலும், புதிய நோயுடையவராக அடையாளப்படுத்தப்படுபவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது இது ஒரு ஆறுதல் அளிக்ககூடிய விடயம். கடந்த இருபது நாட்களாக புதிய கொரோனா நோய் கொத்தணிகள் எதுவும் கண்டுபிடிக்கப்படாமை இன்னொரு ஆறுதலான விடயமாகும். இவ் நிலைமையை தொடர்ந்து பேணுவது மிகவும் சவாலானதாகும்.

மீண்டும் பொருளாதார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு சில நாட்கள் கடந்த பின்னர் நிலைமை கட்டுக்குள் இருப்பது சந்தோஷப்படக் கூடியது தான். ஆனால் மற்றைய இடங்களில் நடந்த நிகழ்வுகளை கவனத்தில் கொண்டு அவதானமாக செயற் படுவது மிகவும் அவசியமானது. நம்மில் பலர் அதனை மறந்து செயற் படுவது கவலை தரக்கூடிய விடயங்கள் ஆகும் . எமது சிறிய கவனக்குறைவு மிகப்பெரிய ஆபத்துக்கு இட்டுச் செல்லக் கூடியது. சமூகப்பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியது நம் எல்லோரி னதும் கடமையாகும். நம்முடைய பல நடவடிக்கைகள் ஆபத்து கொண்டு வரக்கூடிய நிலையை பல இடங்களில் அவதானிக்க முடிகின்றது. இதற்கு நல்ல உதாரணமாக சில செயற்பாடுகளை இங்கு முன்வைப்பது முக்கியமானது. முதலாவது மக்கள் அதிகளவில் கூடக்கூடிய இடங்களில் மக்களின் செயற்பாடு அவர்களின் பொறுப்பற்ற தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. சில மூடிய கட்டிடங்களில் நடாத்தப்படும் சந்தைகளை நடாத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டு அவற்றை சனநெருக்கமின்றி திறந்த வெளிகளில் நடத்துமாறு சுகாதாரத்துறையினரால் அறிவுறுத் தல்கள் வழங்கப்பட்டாலும் பல்வேறு சந்தைகளிற்கு வெளியில் மிகவும் நெருக்கமாக கூடி சந்தை நடவடிக்கைகளை மேற்கொள் வதை விற்பவர்களும் வாங்குபவர்களும் ஈடுபடுவதுதான் அதனை சரியாக கண்காணித்து வழிகாட்டவேண்டிய உத்தியோகத் தர்களும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும் செயற்படுவதானது தமக்கு கொரோனா ஏற்படாது என்ற மமதையுடன் செயற்படுவது போன்றுள்ளது. இவ்வாறான கூட்டத்தில் ஒருவருக்கு தொற்று இருப்பின் அது எவ்வளவு வேக மாக எமது சமூகத்தில் பரவிவிடும் என்பதை நாம் எல்லோரும் தெரிந்து இருக்கிறோம். ஆனால் இவ்வாறான இடங்களில் கூடும்போது அதை மறந்து செயற்படுவதுடன் அவ்வாறு மக்கள் கூடுவதை ஏற்றுக்கொள்ளும் தன்மையானது நாம் இன்னும் எமது தவறுகளில் இருந்து எம்மை மாற்றிக்கொள்ள முடியாத

மனப்பாங்கை கொண்டிருப்பதை மிகவும் ஆபத்தான நடவடிக்கை யாக கொள்ளுதல் வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களை வழிநடத்தி முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டியவர்கள். அவர்கள் தற்போது காணப்படும் சூழ்நிலையை கருத்தில் எடுத்து புதிய முயற்சிகளை புகுத்தி தம்மை தகுதியான தலைவர்கள் என நிறுவித்தல் செய்வதற்கு இது ஒரு சந்தர்ப்பமாகும். ஆனால் பலரும் பழையபடி ஆரோக்கியமற்ற முறைமைகளை கடைப்பிடிப் பதில் விடாப்பிடியாக இருப்பது எமக்கு கொரோனா போன்று பல வைரசுக்கள் தொடர்ந்து எம்மை தாக்கக் கூடிய தன்மையை ஏற்படுத்தி விடுமோ என கவலை கொள்ளவைக்கிறது.

நான் சந்தையை ஒரு உதாரணமாக குறிப்பிட்டாலும் வடமாகாணத்தில் எல்லா இடங்களிலும் இதனை அவதானிக்க முடிகின்றது. பல வழிபாட்டுத்தலங்கள் பொறுப்புடன் நடந்து கொண்டாலும் சில மக்களும் வழிபாட்டுத் தலங்களின் பராமரிப் பாளர்களும் பொறுப்பின்றி நடந்துகொள்வதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் தொற்றுள்ள ஒருவர் இவ்விடங்களில் புலப்படின் இது இன்னொரு தடவை நாம் எமது நடவடிக்கைகளை கைவிட்டு பழைய நிலைக்கு செல்ல வேண்டி வருமென்பதையும் வேண்டி வந்தால் அதன் விளைவானது தற் போதைய நிலையை விட மோசமானது என்பதை நாமெல்லோரும் மனதில் இருத்தி மீட்டுப் பார்த்தால் வேண்டும். இதில் இருந்து விலகுதல் நமது சமூகக் கடமையில் இருந்து விலகுவதாகும். அது என்றோ ஒருநாள் எமக்கு பேரிடியை கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை.

அடுத்ததாக முகக்கவசம் ஒன்றை ஒருசிலரை திருப்திப் படுத்த அணிந்துவிட்டால் நாம் எதுவும் செய்யலாம் என்பது ஒரு

எழுதப்படாத சட்டமாக கைக்கொள்வது அவ்வாறு செயற் படுபவரை பார்த்து நகைக்க வைக்கிறது.

நோய் எவ்வாறு பரவுகின்றது அதனை எவ்வாறு தடுக்க வேண்டும் என்ற அறிவை தேடி பெற்றுக்கொள்ளாது, தடுப்பு முறைகளை மட்டும் கைக்கொள்வது இன்னொரு வேடிக்கையான விடையமாகும். நோய்யானது ஒருவர் நேரடியாகா தும்மும் போது ஏற்படும் சிறுதுகள்கள் நேரடியாக ஒருவரை சென்றடைவதாலோ அல்லது அவ்வாறான சிறுதுளிகள் சுற்றாடலில் விடப்பட்டு விடப்பட்ட பொருட்களை தொட்டு அதனை மீண்டும் தொட்ட விரல்களை வாயிலோ மூக்கிலோ அல்லது கண்ணில் வைக்கும் போது அது உடலில் தொற்றாகி பெருகுகின்றது என்பதை பல தடவைகள் எடுத்துக் கூறினாலும், முகக்கவசம் மட்டும் போதும் என்ற போலிப் பாதுகாப்பை நாடுவது மக்களின் அசண்டை யீனத்தை எடுத்துக் காட்டுகின்றது. நோய் தொற்றில் முக்கியமான விடையம் என்னவெனில் தொற்றை வாய், மூக்கு, கண் போன்ற உறுப்புகளை சென்றடையாது தடுத்தல் ஆகும். இதற்கு சமூக இடைவெளியை இயன்றளவு கைக்கொள்வதும் கைகளை அடிக்கடி கழுவுவதும் மிகவும் முக்கியமானது. இவ்வாறான வசதிகளை மக்கள் கூடும் இடங்களில் போதுமான அளவில் ஏற்படுத்தி கொடுப் பதுடன் அதனை கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்தி கொள்வது மிகவும் அவசியமானது. எப்போதும் ஒரு யுத்தத்தில் வெற்றி கொள்வது எளிது அதனை தக்கவைத்து கொள்வது மிகவும் கடினமானதாகும். இதற்கு கூடியளவு வளங்களை பாவிக்கவேண்டி இருக்கும். நாம் கண்ணுக்கு தெரியாத எதிரி ஒருவருடன் போராடிக் கொண்டிருக்கிறோம்.

இந்துசமயத்தில் சொல்லப்படும் சூரன்போரில்; சூரன் அடிக்கடி உருவை மாற்றிக் கொள்வது பற்றி கூறப்பட்டிருக்கும். அதுபோன்று இவ் வைரசுக்களும் தமது உருவை மாற்றக்கூடியன. நாம் நிச்சயமற்ற தன்மையை கடந்து முடியவில்லை என்பதை எப்போதும் எல்லோரும் மனதில்வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை கைக்கொள்வதுடன், சுவாச நோய்யறிகுறிகள் இருப்பின் வெளியே வராது இருப்பதுடன் அண்மையில் உள்ள வைத்தியசாலையை அணுகி கொரோனா இல்லை என்பதை உறுதிப்படுத்தி கொள்வது வடக்கில் தற்போது உள்ள நிலை தொடர் மிகவும் உதவியாக இருக்கும்.

இன்னும் பல பொருளாதார மற்றும் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கவேண்டிய தேவையுள்ளதையும் கருத்தில் கொள்வதுடன் நமது நாட்டை சேர்ந்த நாற்பதியினாயிரத்திற்கு மேலான மக்கள் நாட்டுக்குள் வரவேண்டியுள்ளனர். இவர்கள் மட்டுமன்றி சுற்றுலா துறை ஆரம்பிக்கும்போது ஆபத்துகள் பலவுள்ளது இதனை வெற்றிகொள்வதென்பது நம்மில் ஏற்படும் சமூக பழக்க வழக்கத்தில் தங்கியுள்ளது என்பதை நம் எல்லோரும் கருத்திலே கொள்வது இக்காலத்துக்கு சாலப்பொருந்தும்.

# 04 வடக்கில் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையும் இயல்பு வாழ்க்கையும்

இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை நெருங்கிக் கொண்டிருக்கையில் நாட்டை வழமைக்கு கொண்டுவந்து பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்பும் நடவடிக் கைகளுக்காக இதுவரை காலமும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த இறுக்கமான நடவடிக்கைகளை சிறிது சிறிதாக தளர்த்தும் நடவ டிக்கைகள் ஏனைய உலக நடுகள் போன்று இலங்கையும் பரீட்ச் சித்து பார்க்க தொடங்கி விட்டது.

இதுவரை காலமும் எதுவித புதிய ஆபத்துகள் இன்றி சில நாட்களை கடக்க முடிந்ததை காணக்கூடியதாக இருந்தது. இவ்வாறு தொடர வேண்டும் என்பதே எல்லோரதும் எதிர்பார்ப் பாகும். இவ் எதிர்பார்ப்பை கைகூட வைப்பது என்பது எமது கையில் தான் உள்ளது. நாம் இவ்வளவு காலமும் கஷ்டப்பட்டு பெற்ற இவ் நிலையை ஒருவரின் அல்லது ஒருசிலரின் பொறுப்பற்ற நடவடிக்கை சடுதியாக கஷ்ட்டத்துக்கு உள்ளாகும் நிலைக்கு கொண்டுசெல்லலாம். இவ்வாறான நிலைமையை மிகவும் திறமையாக கையாண்ட நாடுகளான சிங்கப்பூர் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளில் காணமுடிந்தது. இலங்கை போன்ற நாடு மீண்டும் அவ்வாறான நிலைக்கு மீண்டும் ஒருமுறை செல்வது பலவகையில் மிகவும் ஆபத்தானது. இது இலங்கையின் வடமாகாணத்திற்கு சாலப் பொருந்தும். வடக்கு மாகாணம் ஆனது மிகவும் நீண்ட கால அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து இலங் கையில் மிகவும் வறுமையான மாவட்டங்களை கொண்டு பலசமூக பொருளாதார பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்து வரும் பிரதேசம் ஆகும். மிக நீண்ட யுத்தம் முடிந்து பத்து வருடங்கள் கழிந்தும் இன்னும் அதனால் ஏற்பட்ட வடுக்களில் இருந்து விடுபட முடியாது முன்னோக்கி செல்ல தள்ளாடிக் கொண்டிருப் பதுடன்

மக்களை சரியாக தேவையான தலைமையை வழங்காது தங் களுக்குள் கருத்துக்களை மட்டும் பரிமாறிக்கொள்ளும் வாய்ச் சொல்லு தலைமைகளை கொண்டு காணப்படும் பிரதேசமாக காணப்படுகின்றது.

இவ் பிரதேசத்தில் இனி வரும் நாட்களில் இழந்த பொருளாரத்தை கட்டியெழுப்புவதுடன் மட்டுமின்றி கொரோனா தொற்றானது மீண்டும் ஏற்படாது தவிர்த்தல் மிகவும் முக்கிய மானது. இதற்கு எல்லோரதும் ஒத்துழைப்பும் இன்றிய மையாதது . சகல தரப்பும் தமது கடமைகளை உணர்ந்து செயற்படுதல் மிகவும் முக்கியமானது. எல்லோரும் தமது கடமையை உணர்ந்து செய்தல் என்பது ஒரு சுலபமான விடயம் அல்ல. ஒவ்வொருத்தரும் தங்களுடைய நலன்களுக்கு முன்னுரிமை வழங்குவதை விடுத்து பொது நலனிற்காக எல்லோரையும் கொண்டு வருவது என்பது எளிதான விடையம் அல்ல. பொதுநல நோக்கில் எல்லோரையும் கொண்டுவருவதற்கு சரியான வழிகாட்டுதலும் அதனை செயற்படுத்தும் திறனும் தேசிய மட்டத்தில் மட்டுமல்லாது பிராந்திய ரீதியிலும் பல்வேறு மட்டத்திலும் ஏற்படுத்தப்படுத்தல் அவசியமானது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் வெவ்வேறு வகையான நடைமுறைகள் அவர்களின் பிரதேச தேவைகளுக்கு ஏற்ப பின்பற்றப்பட்டுக்கொண்டு இருக்கையில் சடுதியாக மாற்றத்தை கொண்டுவருவது என்பது இலகுவான விடயமல்ல.

வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை கொரோனா தொற்று ஏற்பட்ட நோயாளி அடையாளம் காணப்பட்டு சிலவாரங்கள் கடந்த நிலையில் பலர் அவ் தொற்றின் தாக்கம் எம்மை விட்டு விலகி விட்டது என்ற மனப்பாங்குடன் செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது. இது எம்மை ஆபத்தான நிலைக்கு இட்டு செல்ல வழிவகுக்கும். இன்னும் சிலர் முகக்கவசத்தை அணிந்து கொண்டு கைகளை கழுவினால் நாம் இந்த வைரஸில் இருந்து

விடுபடமுடியும் என எண்ணி சகல விதமான நடவடிக்கைகளையும் கொரோனாவுக்கு முந்திய நிலைமை போன்று ஆற்ற விளைகின்றனர். இதில் பலர் சரியாக இவ் நடவடிக்கைகளை கடைப் பிடிப்பதுமில்லை. இதனால் கொரோனா தொற்றை தடுப்பதற்கு சுகாதார துறையினால் விடப்படும் வழிகாட்டல்கள் பல வெறும் கடதாசி பாத்திரங்களாக இருக்கும் நிலை காணப்படுகின்றது.

அலுவலங்கள் ஆரம்பிப்பதன் முன்னர் அவற்றில் கடைப் பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி விரிவான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் எத்தனை அலுவலகங்கள் இதனை சரியான முறையில் கடைபிடிக்கின்றன அல்லது கடைபிடிப் பதற்கான நடவடிக்கைகளை தங்களால் இயன்றளவு நடைமுறைப் படுத்த முயன்றுவருகின்றன என்பது கேள்விக்குள்ளாக் கப்படவேண்டிய விடையமாக காணப்படுகின்றது. இவ் விடையங் களை நடைமுறைப்படுத்துதல் சுகாதார துறையினர் சார்ந்த ஒரு நடவடிக்கையாக பார்க்கப்படும் தன்மை காணப்படுகின்றது. இவ்வாறான மனப்பாங்கானது மற்றைய தொற்றுநோய்களான டெங்கு நோய் போன்றவற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கை களிலும் அவதானிக்க முடிந்ததுடன் அதனை வெற்றிகொள்வதில் தோல்வியடைந்து அவ் நோயானது இன்று எம் சமூகத்தில் காணப்படும் நோயாக மாறுவதற்கு காரணமா க அமைந்துள்ளது.

நாம் இதனை கருத்தில் கொண்டு கொரோனா நோயை கட்டுப்படுத்துவது நம் எல்லோரினதும் கடமை என்பதை எல்லோரும் உணர்ந்து தமது பங்கினை செவ்வனே செய்வது காலத்தின் தேவையாகும். அது அரச சேவையை வழங்கும் நிறுவனங்களாக இருக்கலாம் அல்லது சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனங்களாக இருக்கலாம் அவர்களுக்குரிய பங்கை சரியாக வழங்குவதன் ஊடாக மாத்திரமே நாம் இதனை வெற்றிகொள்ளமுடியும்.

முக்கியமாக கொரோனா தொற்று பரவக்கூடிய சிலநிறுவனங்களுக்கான வழிகாட்டிகள் சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது. சிகை அலங்கரிப்பு நிலையங்கள் அதிக நோயைப்பரப்பக்கூடிய ஒரு இடமாக கருதி மிகவும் இறுக்கமான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதுடன் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பரிசோதித்து அனுமதி வழங்கினால் மட்டுமே இவ் நிலையங்கள் சேவைக்காக திறக்க முடியும் என அறிவுறுத்தப் பட்டது. ஆரம்பத்தில் குறிப்பிட்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவது கடினமாக இருக்கும் என சிகை அலங்கரிப்பளார்கள் எல்லாம் திறம்பட தமது சேவைகளை மிகவும் பாதுகாப்பாக வழங்கக்கூடிய வகையில் மாற்றி அமைந்திருப்பதை பலரும் பாராட்டுவதை காணக்கூடியதாகவுள்ளது. இதில் ஆபத்தானது இருதரப்பிற்கும் உண்டு என்பதை எல்லோரும் உணருதல் இவ் நோயை தடுப்பதற்குரிய முதல் படியாகும் இதில் இன்னொரு விடையத்தையும் அவதானிக்க முடிகின்றது. சிகை அலங்கரிப்பு நிலையத்தை நடத்துவார்கள் வடிக்கையாளர்களை துண்டையும் துவாயவையயும் கொண்டுவரும்படி கேட்டுக்கொண்டது சிலபொறுப்புகளை அவர்களின் வாடிக்கையாளர்களிடம் விட்டு இருவரின் பங்களிப்புடன் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் சிறந்த நடவடிக்கையாகும். இதனை ஏனைய துறையினரான போக்குவரத்து சேவைகள், பொது சந்தைகள், உணவகங்கள் சிற்றுண்டி சாலைகள், தனியார் வைத்தியசேவைகள், போன்றனவும் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை பட்டியல் இட்டு அவற்றின் செயல் படுத்தலில் அவர்களின் வாடிக்கையாளர்களை பங்காளியாக்குவதுடன் இருதரப்பினரும் இணைந்து செயற்படுவதன் ஊடாக வெற்றியை சமனாக பங்கிட்டு கொள்ளமுடியும். கொரோனாவுக்கு பின்னான காலமானது நம்மையெல்லாம் புதியவொரு உலகிற்கு இட்டுச்செல்ல சிறிய சிறிய மாற்றங்கள் உறுதுணையாக இருக்கும். காலத்தின் தேவையறிந்து பொது நோக்கில் செயற்படுவது முக்கியமானது.

இவ் கட்டுரையை எழுதிக்கொண்டு இருக்கையில் வடமாகாணத்தில் கொரோனா தொற்று அடையாளப்படுத்தப் பட்ட பதினேழு பேர்களில் பதினாறு பேர் சிகிச்சையின் பின் இரண்டு சோதனைகளில் நோய் இல்லையென உறுதிப்படுத்தப் பட்டு பதினாறு பேர் வீட்டுக்கு அனுப்பப்பட்டு வீட்டில் 14 நாட்கள் தனிமை படுத்தலிற்கு உட்படுத்தப்பட்டு மீண்டும் பரிசோதிக்கப் பட்டபோது ஆறு பேருக்கு பரிசோதனை முடிவுகள் நோய் இல்லை என்பதை உறுதிப்படுத்த தவறியமை சிலருக்கு சிறு பயத்தை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிந்தது. இவ்வாறான நிலைமைகள் தென்கொரியா போன்ற ஏனைய நாடுகளிலும் அவதானிக்கப்பட்டு அதற்குரிய விளக்கங்களும் அறியப்படுத்தப் பட்டுள்ளன. நோய் தாக்கத்திற்கு உட்பட்டு குணமடைந்த வர்களில் இறந்த அல்லது செயலற்ற வைரசு துகள்கள் காணப் படலாம். இவ் துகள்கள் பரிசோதனை முடிவுகளை பாதிக்கலாம். அல்லது இவ் வைரசானது தொண்டையில் மட்டுமல்லாது ஏனைய உறுப்புகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தி அதில் செயற்பாடு மந்த நிலையில் காணப்பட்டு தொண்டையில் பரிசோதனைக்கு மாதிரிகள் எடுக்கப்படும்போது தேவையான அளவு வைரசுக்கள் இல்லாமையால் பரிசோதனை முடிவுகள் நோயற்றவராக இருந்து பின்னர் நோயையுடையவராக வரக்கூடிய சாத்தியம் உண்டு. எனவே தற்போதைய பரிசோதனை முடிவுகள் அவர்களிற்கு திரும்ப நோய்த்தொற்று ஏற்பட்டதால் ஏற்பட்ட ஒன்று அல்ல என்பதை நாம் கவனத்தில்கொள்ளுதல் வேண்டும். இது ஒரு ஆறுதல் அளிக்கக்கூடிய விடயமாகும். இதுபற்றி மேலும் இனி வரும் கட்டுரைகளில் பார்க்கலாம்.


தற்போது நிலையில் வடமாகாணத்தில் கொரோன தொற்று பயப்படக்கூடிய நிலையில் காணப்படாத போதும் எந்நேரத்திலும் இவ் நிலைமை சடுதியாக மாற்றத்துக்கு உட்ப டலாம். ஏற்கனவே இங்கே குறிப்பிட்டவாறு நம் எல்லோரும் பொறுப்புடன் செயற்படுவதுடன் அதற்குரிய தேவையான தலைமைத்துவத்தை வழங்கி சரியான வழியில் இட்டுச்செல்லுதலே சம்பந்தப்பட்ட தரப்பினது கடமையாகும்.

# 05 வடமாகாணத்தில் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் - ஒரு பார்வை

உலகலாவிய ரீதியில் இன்று முழு உலகையும் ஆட்டிப்படைக்கும் கொரோனா நோய் (COVID 19) ஆனது மிகவும் வேகமாக பரவும் நோய் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இதன் வேகமான பரம்பல் அது ஏன் எப்படி எவ்வாறு பரவுகின்றது என்பது பற்றிய விஞ்ஞான ரீதியான காரணங்களை இனிவரும் காலங்களில் விரிவாகப்பார்க்கலாம். இன்றைய கட்டுரையில் இலங்கையில் வடமாகாணத்தில் தற்போதைய நிலமையைப் பற்றியும் அதன் தாற்பரியங்களையும் விரிவாக அறிவது மிகவும் முக்கியமானது.

பொதுவாக தொற்றுநோய்களிற்குரிய விஞ்ஞானரீதியான கருத்தியல் ஆனது பொதுவகைப்பாட்டு வட்டத்துக்குள் அடங்கும். ஒரு நோய் உருவாவதை தடுப்பது என்றால் பொதுவகைப்பாட்டு வட்டத்தை நடைபெறாது தடுப்பது இன்றியமையாதது.

தொற்று நோய்க்குரிய பொதுவகைப்பாடானது பின்வரும் வட்டத்தைக் கொண்டது.



எனவே இவ் அவத்தைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ நடைபெறாது செய்வதன் மூலம் நாம் எந்தவொரு கிருமித்தொற்றையும் இல்லாமல் செய்யலாம்.

தற்போது உலகலாவிய தாக்கத்தை ஏற்படுத்தும் கொரோனா வைரஸ் ஆனது முதல் விலங்குகளில் இருந்து மனிதனிற்கு கடத்தப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டாலும் இன்று தற்போதய நிலவரப்படி இந்த வைரஸ் தொற்று வட்டமானது மனிதனில் மாத்திரம் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இத்தாக்கத்தைக் கட்டுப்படுத்த பல உலக நாடுகள் பல்வேறு வழிமுறைகளை தங்களிடம் காணப்படும் வளங்களிற்கு ஏற்ப திட்டங்களை போட்டு செயற்படுத்தி வருகின்றன.

இதில் உலகளாவிய ரீதியாக காணப்பட்ட திட்டமிடல்கள் அவற்றின் தாக்கங்கள் அவை எவ்வாறு மற்றைய நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை பிறிதொரு கட்டுரையில் ஆராய்வது சிறந்தது.

இக் கட்டுரையில் கிட்டத்தட்ட 1.2 மில்லியனைக் கொண்ட 5 மாவட்டங்களை உள்ளடக்கிய இலங்கையின் வடமாகாணம் எவ்வாறு நடவடிக்கைகளை கையாண்டது என்பதையும் இவ் நோயை கையாள்வதில் எதிர்கொள்ளும் சவால்களையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

மேலே குறிப்பிடப்பட்ட வட்டமானது எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பதை பார்ப்போம்.

முதலில் வைரஸ் ஆனது குறிப்பிடப்பட்ட பிரதேசத்தினுள் உள்நுழைவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை கையாளுதல். இவ்விடயத்தை கருத்தில் கொள்ளும்போது இவ் புதுவகை வைரஸ் நாட்டிற்கும் இப்பிரதேசத்திற்கும் விமானம் மூலம் அல்லது

கடல்வழியாகவோ மட்டுமே எடுத்து வரமுடியும். இதனால் விமானங்களின் போக்குவரத்தில் கட்டுப்பாடுகளும் விமான நிலையத்தில் நோயுடன் வருபவரை கண்டுபிடிப்பதற்கான செயற் பாடுகளும் சரியாக முன்னேடுக்கப்பட வேண்டும், இவ் நடவடிக் கைகள் இலங்கையில் இவ்வருட ஆரம்பத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டாலும் பங்குனி மாதத்தில் இருந்துதான் அவ்நட வடிக்கைகள் முழு அளவில் பெரும் வீச்சுடன் கையாளப்பட்டதை அவதனிக்க முடிகின்றது. இது இலங்கையில் மாத்திரமின்றி முழு உலகிலும் அவதானிக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாக காணப்ப டுகின்றது. இதுபற்றி மேலும் ,இன்னொரு கட்டுரையில் ஆராய்வது மிகவும் நன்று. ஆனால் வடமாகாணத்தை பொறுத்தவரை இவ் விடையமானது முதலாவது கொரோனா நோயாளியை பெற்றுக் கொள்வற்கு மூலமாக அமைந்தது.

இவ்வழியினூடகவே பலர் வைரசை காவிக்கொண்டு நாட்டுக்குள் வருகை தந்தனர்.ஆனால் பலர் தனிமைப்படுத்தல் முகாமிற்கு எடுத்துச் செல்லப்பட்டதால் இலங்கையானது இவ்வைரசின் பெரும் தாக்கத்தில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள உதவியுள்ளது. விடப்பட்ட ஒரு சிலர் சமூகத்திற்குள் சென்றதுடன் அவர்களுடைய பல நடவடிக்கைளும் நோய் பரம்பலுக்குரிய காரணமாக அமைந்தது. இதனடிப்படையில் வடமாகாண சுகாதார அமைச்சின் தகவல்களின்படி சுவிஸ் நாட்டில் இருந்து வந்த மதபோதகர் ஒரு மூலமாக இருந்து அவர் இலங்கையில் இருக்கும் போது அவருடன் நெருங்கி பழகியவர் களுக்கும் அவரால் நடாத்தப்பட்ட ஆராதனையில் கலந்து கொண்டோரிற்கு நோய் ஏற்படலாம் என கருதி எடுக்கப்பட்ட நடவடிக்கையானது வைரஸ் கிருமி நாட்டிற்குள்ளும் வடமாகாணத் திற்குள்ளும் கொண்டுவராது இருக்கவும் அது அடுத்த நிலைக்கு கொண்டு செல்லப்படாமல் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பலராலும் கலந்துரையாடலுக்கும் ஆராய்விற்கும் உரிய விடையமாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

இவ் நடவடிக்கையானது வடமாகாணத்தில் இவ்வைரசை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் இது ஒரு பிரபலமான நடவடிக்கையாக கருத வேண்டும்.

ஆனால் நாட்டின் மற்றைய பாகங்கள் போன்று வடமாகா ணத்திலும் வடமாகாண சுகாதார திணைக்களம் மத்திய சுகாதாரதிணைக்களத்துடன் சேர்ந்து முப்படைகள் அரசதிணைக் களங்கள், அரசார்பற்ற நிறுவனங்கள், ஊடகங்கள் என்பவற்றுடன் இணைந்து இரவுபகலாக இருக்கும் வளங்களைத் திரட்டி எடுத்த நடவடிக்கைகள் தான் இன்றும் இப்பகுதியை உலசுகாதார நிறுவனத்தின் 4 ம் நிலை பரம்பலான சமூகப்பரம்பலிற்கு செல்லாது பாதுகாக்க முடிந்ததை எப்போதும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இதற்கு முக்கிய காரணமாக பின்வரும் தொடர் நடவடிக் கைகளை காரணமாகக் கொள்ளலாம். மேலே குறிப்பிட்டது போன்று நோய்கிருமியுள்ள வரக்கூடியவர் என கருதும் நபரை சமூகத்தில் இருந்து தனிமைப்படுத்தி வைத்தல். இவ் தனிமைப் படுத்தல் சுயதனிமைப்படுத்தலாகவோ அல்லது தனிமைப்படுத் தலுக்காக பிரத்தியோகமான அமைக்கப்பட்ட தங்குமுகாம் களாகவோ இருக்கலாம். வடமாகாணத்தை பொறுத்த வரை கிடைக்கப் பெற்ற தரவுகளின் படி கிட்டத்தட்ட 2000 பேர்கள் வரை இவ்வாறான தனிமைப்படுத்தல்களிற்கு உட்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு உரியமுறையில் கையாளப்பட்டதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் வடமாகாணத்திற்கு பதினேழு கொரோனா நோயாளிகளை கொண்டுவந்த சம்பவத்திலும் இருபது நபர்களை சரியாக அடையாளம் கண்டு தனிமைப்படுத்தபட்டமை மட்டு மல்லாது அவர்களுக்கு தேவையான பரிசோதனைகளை சரியான நேரத்திற்கு செய்தமையால் மேலதிக தொற்று எற்படாது தடுக்க முடிந்தது. எனவே தனிமைப்படுதல்களை சரியாக திட்மிடுதலும்

தொற்றுடன் தொடர்பு உடையவர்களை அடையாளம் காணுதலும் அவர்களை சரியாக கையாளுதலும் மிகவும் முக்கியமான விடையங்கள் ஆகும்.

இவ்வளவு காலமும் எமக்கு யாரிடம் இருந்தது வைரஸ் வரலாம் என்பது தெரிந்து இருந்தது. எனவே நாங்கள் அவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்த முடிந்தது. இனிவரும் காலங்களில் இது ஒரு கடினமான விடையமாக அமையலாம். எமக்கு தெரியாமல் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நோயாளிகளை இனம்கண்டு தனிமைப்படுதாமல் விட்டு இருந்தால் அவ்நோயாளி வேறு ஒருவருக்கு நோயை பரபலாம். அதற்குரிய சந்தர்பங்கள் வடமாகாணத்தை பொறுத்தவரை மிகக்குறைவு. ஏனெனில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அத்துடன் தொற்றுகுள்ளானவருக்கு இவ்வளவு காலத் தினுள் நோய்அறிகுறி ஏற்பட்டு இருக்கும். ஒருசிலர் கேட்கலாம், நோய்அறிகுறி இல்லாமல் தொற்று எற்பட்டுஇருந்தால் என்ன நடக்கும். ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி வைரஸை காவும் நபர் வெளியில் இருந்து வந்தகாலத்திற்கும் தற்போதைய காலத்திற்குமான இடைவெளி கிட்டதட்ட 45 தொடக்கம் 50 நாட்கள். இது கிட்டதட்ட மூன்று நோயரும்பு காலத்திற்கு இணையானது. கடைசியாக நோயாளி ஒருவர் சமூகத்தில் வைத்து கண்டுபிடிக் கபட்ட பின்னர் 40 நாட்கள் கடந்துவிட்டது. எனவே சமூகத்தில் நோய்தொற்று நடந்துகொண்டு இருப்பதற்கு வாய்ப்பு மிகமிக குறைவு.

எனவே இப்போது இருக்கும் மிகப்பெரிய சவால், வெளியில் இருந்து மறுபடியும் கிருமியுடன் ஒருவர் சமூகத்திற்குள் நுழையவிடாது தவிர்த்தல். இதற்கு தற்போது தொற்று ஆபத்து கூடிய பிரதேசங்களில் இருந்து மக்களின் நடமாற்றத்தை தவிர்த்தல் அல்லது முற்றாக கட்டுபடுத்தல். இதனை ஒருநாட்டுக்குள் செய்வது மிகவும் கடினம். இலங்கையை பொறுத்தவரை ஆபத்து கூடிய பிரதேசங்கள் ஆக முக்கிய வர்த்தக நடவடிக்கை பிரதேசங்கள்

காணப்படுகின்றன. பலவர்த்தக நடவடிக்கைகளுக்காக இவ்இடங் களுக்கு செல்ல வேண்டியுள்ளது இதன் காரணமாக தொற்று மற்றைய இடங்களுக்கு பரவ காரணமாக அமையாது தடுக்கபடுதல் வேண்டும். தற்போது இவ்வாறு வடமாகாணத்தை விட்டு தேவை யில்லாது சென்று வருவது மட்டுபடுத்தப்பட்டு இருப்பதுடன், சென்று வருபவர்களும் கண்க்காணிக்கபட்டு வருகின்றார்கள். அதுமட்டுமில்லாது அவர்களுக்குரிய தேவையான பரிசோத னைகளும் தேவைக்கு ஏற்ப செய்யப்பட்டு வருகின்றது. எனவே இவ் தொடர்கண்காணிப்பு என்பது மிகவும் இன்றியமையாதது.

இன்று அநேகமாக தமிழ் ஊடகக்களில் பேசப்படும் விடையம் கொழும்பு புறநகர் பகுதியில் இருந்து வடமாகாணத் திற்கு தனிமை படுதலுக்காக கொண்டு வரப்பட்ட மக்களால் ஏற்படக்கூடிய ஆபத்து பற்றியது ஆகும். ஆபத்து என்பது இவ்வாறானவர்கள் இருபதால் ஏற்படலாம் அல்லது அவர்களை கையாளும் போது ஏற்படலாம். ஆபத்து என்பது அவர்களை வெளியில் நடமாட விடுவதை விட குறைவானது. எனவே அவர்களை தனிமைபடுத்தல் முகாமில் வைத்திருத்தல் இன்றியமை யாதது. ஏன் வடக்கில் தனிமைபடுத்த வேண்டும் என்ற கேள்வியும் எழுப்பபடுகின்றது. இதே நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை நிலை யங்கள் தென்பகுதிகளில் காணப்படுகின்றன. இதில் முக்கியமான விடயம் என்னவெனில் இவ்விடயங்களை கையாளும் போது ஆபத்து நிலைமையை சமநிலையில் பேணுதல் அவசியம்.

இவ் தனிமைப்படுதல் மையங்கள் சமூக தொடர்பு இன்றி பாதுகாப்பு படையினரால் கையாளப்படுகின்றன. எனவே இவ் தனிமைபடுதல் மையங்களுடன் மக்களின் தொடர்பை எற்படாது செய்தல் மிகவும் முக்கியம்.

இவ்வாறான நிலையில் ஆபத்து ஏற்படுத்தக்கூடியவர்களை தனிமைபடுத்தி அவர்களுக்கு உரியகாலத்தில் பரிசோதனைகளை செய்தல் மிகவும் முக்கியம்.

எனவே இவ் பரிசோதனைகளை செய்வதற்குரிய வசதிகளை கூட்டுவது மிகவும் முக்கியமானது. இவ் வசதிகளை அதிகரிப்ப தற்கான வளங்கள் குறைவாக காணப்படுகின்றது. இதனை மேலும் பெற்றுகொள்வதில் உலகலாவிய தொடர்வளங்கள் செயற்பாடு களில் காணப்பட்ட குறையானது மிகவும் செல்வாக்கு செலுத்து கிறது. தொடர்வளங்கள் செயற்பாடுகளை பல்வேறு மட்டங்களில் முன்னேற்றம் அடையச்செய்ய வேண்டிய தேவை உள்ளது.

எனவே தற்போது ஆபத்து குறைந்ததாக வடமாகாணம் காணப்பட்டாலும், ஏற்படக்கூடிய ஆபத்துகளை முன்கூட்டி அறிந்து அதற்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடக இக்கொடிய தொற்றில் இருந்து எம்மையும் எமது மக்களையும் பாதுகாக்க முடியும்.

கட்டுரையாளர்
சமூகவைத்திய நிபுணர், சிரேஸ்ட விரிவுரையாளர்,
சமூகம் மற்றும் குடும்பமருத்துவ துறை,
மருதுவபீடம், யாழ் பல்கலைகழகம்

# 06 கொரோனாவுடனான புதிய இயல்பு வாழ்க்கையும் வடமாகாணமும்

கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையானது உலக ளாவிய ரீதியாக ஒரு கோடியை நெருங்கிக்கொண்டு இருக்கையில் உலக நாடுகளும் உலக சுகாதார நிறுவனமும் நோயை கட்டுப்படுத்த திணறிக்கொண்டு இருக்கையில் இது பற்றிய பல வாதப் பிரதி வாதங்களுடன் நாட்கள் கடந்து செல்வதுடன் நிச்சயமற்ற தன்மை இன்னும் விலகாது முழு உலகமும் இக் கால கட்டத்தை கடக்க வேண்டிய நிலையிலேயே உள்ளது. கடந்த வாரத்தில் புதிதாக அடையாளம் காணப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை சடுதி யாக அதிகரித்து காணப்பட்டதுடன் இறப்புகளின் எண்ணிக் கையில் ஒரு அதிகரிப்பை அவதானிக்க முடிந்தது. உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டது போன்று தொற்றின் தொடக்க மாதத்தில் பத்தாயிரம் நோயாளிகள் மாத்திரமே அடையாளப்படுத்தப்பட்டன. இந்த 2020 ஜூன் மாதத்தில் மாத்திரமே நான்கு மில்லியன் நோயாளர்கள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளனர். இதற்கு தொற்றின் பரம்பல் உலகளவில் பரந்து காணப்படுவதுடன் தொற்றாளர்களை கண்டுபிடிக்க கூடிய வசதிகளின் அதிகரிப்பும் இன்னொரு காரணமாகும். அதிக பரிசோதனைகளினால் தான் அதிக நோயாளிகள் கண்டுபிடிக் கப்படுவதால் அவர்களை பராமரிக்க வேண்டியுள்ளதால் பரிசோத னைகளின் அளவை குறைக்க வேண்டும் என்ற வாதங்களையும் அவதானிக்க முடிகின்றது. இது ஒரு பிழையான கருதுகோள் என உலகசுகாதார நிறுவனம் உட்பட பொதுசுகாதார துறைசார் விஞ்ஞான ஆய்வாளர்களும் வல்லுனர்களும் எடுத்துக்கூறி வருகின் றனர். அதாவது சமூகத்தில் வைரசின் பரம்பலை கட்டுப்படுத்தவோ அல்லது இல்லாது செய்வதற்கு வைரசானது சமூகத்தில் எவரிடமாவது காணப்படுகின்றதா என்பதை அறிவதுடன்

அவருடன் தொடர்பில் இருந்தவர்களை பூரணமாக கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்துவதுடன் பரிசோதனைக்குட்படுத்தி நோயின் நிலையை கண்டறிதல் நோய்பரம்பலின் கட்டுப் படுத்தலில் மிகவும் முக்கியமான பொதுசுகாதார நடவடிக் கையாகும். இதனை எவ்வாறு எந்தளவு வெற்றிகரமாக கையாளப் படுகின்றது என்பதை பொறுத்தே ஒருபிரதேசத்தின் அல்லது ஒருநாட்டில் தொற்று நோயின் கட்டுப்பாடு தங்கியுள்ளது. சரியான தடுப்பூசிகள் அற்ற நிலையில் இவ் நடவடிக்கைகள் மாத்திரமே தற்போது கொரோனவை கட்டுப்படுத்த கூடியதாக உள்ளது.

இலங்கையை பொறுத்தவரை கொரோனவை கட்டுப்படுத் தும் மூலோபாயமானது தொற்றாளர்களினை சமூகத்தில் இருந்து சமூகத்திற்கு தொற்றை பரப்ப முன்னர் கண்டுபிடித்து அவர்களை சமூகத்தில் இருந்து அப்புறப்படுத்தி தனிமைப்படுத்தல் முகாமிலோ அல்லது இதற்கென பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட வைத்திய சாலைகளில் வைத்து பராமரித்தல். இதனூடாக சமூகத்தில் இருந்து கிருமியை முற்றாக இல்லாது செய்யமுடியும். இதற்கு நோயாளர் களை சமூகத்தில் இருந்து தாமதம் இன்றி அப்புறப்படுத்துதல் மற்றும் நோயாளியுடன் தொடர்பில் இருந்த பரவல் ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ள சகலரையும் கண்டுபிடித்து தனிமைப்படுத் துவதுடன் அவர்களை மீண்டும் சமூகத்தில் வாழ அனுமதிக்கும் போது தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தல் மிகவும் அவசியமாகும். இவ்வாறான நடவடிக்கைகளில் இலங்கையின் பொது சுகாதாரதுறை மிகவும் வினைத்திறன் மிக்கதாகவும் பல இதேபோன்ற தொற்று நோய்களை கட்டுப்படுத்துவதில் அண்மைக் காலக்களில் பல குறிப்பிடக்கூடிய வெற்றியையும் பெற்று உலகளவில் பாராட்டை பெற்றிருந்ததை குறிப்பிடுதல் முக்கிய மானது. முக்கியமாக மலேரியா, பைலேரியா போன்ற நோய்களை இலங்கை நாட்டில் இருந்து முற்றாக அகற்ற முடிந்தது ஒரு குறிப்பிடகூடிய விடயமாகும். இவ்வாறான நடவடிக்கைகளில் பொதுமக்களின் ஒத்துழைப்பும் பிரதானமாக தொற் றுள்ளவர்களை

அடையாளப்படுத்துவதில் பொதுமக்கள் வழங்கும் தகவல்கள் மிகவும் உதவியாக அமைவது குறிப்பிடத்தக்கது.

நோய்கட்டுப்பாட்டில் மேற்குறிப்பிட்ட நடவடிக்கை யுடன் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போன்று நோயாளர்களை அடையாளப்படுத்தக்கூடிய பரிசோதனை வசதிகளை மிகவும் முக்கியமானவை. இவைதான் நோயாளியை சமூகத்தில் இருந்து கண்டுபிடிப்பதற்கும் நோயாளியென அல்லது நோய் ஏற்படக்கூடிய ஒருவர் என கருத்தப்பட்ட ஒருவர் நோயுடையவர் இல்லையென உறுதி செய்து சமூகத்தில் மீண்டும் வாழ அனுமதிப்பதற்கு இப் பரிசோதனைகள் அவசியமானவை. எனவேதான் இலங்கையில் இப்பரிசோதனை வசதிகளை இயன்றளவு படிப்படியா கூட்டி தேவைக்கு ஏற்ப பரிசோதனைகளை செய்ய வசதிகள் ஏற்படுத்தப் பட்டன. வடமாகாணத்திலும் இவ்வாறான வசதிகள் முதலில் மருத்துவ பீடத்திலும் பின்னர் போதனா வைத்தியசாலையிலும் ஏற்படுத்தப்பட்டு தற்போதும் சேவைகளை வழங்கி வருகின்றன. எனவே நோயாளர்களை அடையாளப்படுத்துதல் தனிமைப்ப டுத்தல் அவர்களுடன் தொடர்பில் இருந்த சகலரையும் அடை யாளப்படுத்தி அவர்களை தனிமைப்படுத்தல், நோயுடையவர் சந்தேகத்திற்குரியவர் எல்லோரையும் பரிசோதனைகளுக் குட்படுத்தல், நோயுடையவர்களை சிகிச்சையளித்தல் போன்ற நட வடிக்கைகளே உலகளாவிய ரீதியாக கொரோனா கட்டுப் பாட்டுக்குரிய மூலோபாயமாக காணப்படுகின்றது. இவ் நடவடிக் கைகளை வினைத்திறனுடன் மேற்கொண்டதன் ஊடாக இலங்கையில் சமூக தொற்று ஏற்படாது தடுக்கப்பட்டதுடன், படிப்படியாக பொருளாதார நடவடிக்கைகளை ஆரம்பிக்க கூடி யதாக இருந்தது.

இவ் நடவடிக்கைகள் இலங்கையினுள் முடக்கத்தின் முன்னர் வெளியில் இருந்து கொண்டுவரப்பட்ட வைரசின் தொற்று மூலங்களை இயன்றளவு விரைவாக சமூகத்தில் இருந்து அகற்ற முடிந்தது. தற்போது இலங்கையில் பதிவு செய்யப்படும்

பெரும்பாலான நோயாளிகள் வெளியில் இருந்து தற்போது வருகை தருபவர்களிடம் இருந்து வருவதை அவதானிக்க முடிகிறது. எனவே தான் நாட்டின் தனிமைபடுத்தல் மற்றும் பரிசோதனை வசதிகளிட்கு ஏற்ப நாட்டினுள் வருபவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இவ் மட்டுப்படுத்தலை நீண்ட நாட்களுக்கு தொடர முடியாது. அநேகமான உலக பொருளாதாரம் இன்று சர்வேதச மயப்படுத்தப்பட்டிருப்பதுடன் பிரதானமாக சுற்றுலாதுறை சார்ந்ததாக காணப்படுகின்றது. இலங்கையின் பொருளாதாரம் அண்மைக்காலமாக இவ் துறைசார் வருமானத்தையே பெருமளவு தங்கியிருக்கிறது. எனவே இத்துறை சார்பான கட்டுப்படுத்தலிலும் தளர்வு ஏற்படுத்தவேண்டியது தவிர்க்க முடியாதது. இவ் தளர்வு எமக்கு மீண்டும் கிருமியை நாட்டினுள் கொண்டு வரக்கூடிய சாத்தியகூறுகளை அதிகரிக்கக்கூடும். ஏற்கனவே பொருளாதார நடவடிக்கைகளை தயக்கத்துடன் ஆரம்பித்தது போன்று இத்தனையும் ஆரம்பித்துதான் ஆக வேண்டும். இதற்கான மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. அத்துடன் வடமாகாணத்தின் பொருளாதாரம் அண்மை காலமாக இடம்பெயர்ந்தோர் சார்ந்த பொருளாதாரமாக மாறி வருவதையும் மறுக்கமுடியாது. இது அவர்களின் வருகையும் தேவையானது. இவ்வாறான நடவடிக் கைகளுக்கு அனுமதியளிக்கும்போதும் அதனால் வரக்கூடிய ஆபத்துகளை கையாள நாம் தயாராக இருத்தல் வேண்டும். நாம் அவ்வாறான தயார் நிலையில் எம்மை வைத்திருக்கிறோம் என்ற கேள்விக்கு எமது மக்களின் நடவடிக்கைகளை அவதானிக்கும் போது இல்லை என்பதே பதிலாக காணப்படுகின்றது.

எம் மத்தியில் பலரதும் கேள்வியாக அமைவது என்னவெனில் தற்போது நாட்டில் சமூகமட்டத்தில் மதங்களிற்கு மேலாக கொரோன தொற்று இல்லாதபோது நம் ஏன் இந்த கடினமான சுயபாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்பதாகும். ஒருசிலர் இதற்கு மேலே போய் சுகாதார திணைக் களத்தினர் தம்மீது தேவையற்ற அழுத்தத்தை ஏற்படுத்துவதாக கருதுகிறார்கள். ஒருசிலர் நாம் எமது அன்றாட வாழ்விற்கு

திண்டாடும் போது இதை ஒரு மேலதிக சுமையாக கருதுகிறார்கள். எனவே இவ் சிந்தனையில் மாற்றத்தை கொண்டு வருவது மிகவும் இலகுவானதல்ல. இது மிகவும் சவாலானது. இந்த சவாலை அது சார்பாக பணியவிறுப்பவர்கள் சரியானமுறையில் கையாளக்கூடிய பொறிமுறைகளையும் உத்திகளையும் கொண்டிருக்கிறார்களா என்றால் அதிலும் நாம் நிறைய வேலை செய்யவேண்டியுள்ளது.

இலங்கையை பொறுத்தவரை மேலே குறிப்பிட்டது போன்று தொற்று நோய்களை கட்டுப்படுத்துவத்தை வெற்றி கரமாக செயற்பட்டது போன்று எமது பழக்கவழக்கத்தால் பெருகி வரும் தொற்று அல்லாத நோய்களை கட்டுப்படுத்துவதில் வெற்றிக்கான முடியவில்லை. இதற்கு பலகாரணங்கள் இருப்பினும் இவற்றில் ஒருசில முக்கியகாரணம் எமது மக்களில் நடத்தைப் பாங்குமாற்றத்தை கொண்டுவருவதில் உள்ள தோல்விகள் ஆகும்.

அநேகமான எமது சகல மக்களை அறிவூட்டும் செயற்பா டுகளும் சுகாதாரகல்வியுடன் நின்று விடுவதாகும். அது **1986** ம் ஆண்டு Ottawa சாசனத்திற்கு அமைவான சுகாதார மேம்பாடாக அமைவதில்லை. ஒரு சுகாதார மேம்பாட்டினை அடைவது என்பது மிகவும் சுலபமானது அல்ல. நாம் எப்போது எமது உடனடி பிரச்சனைகளில் இருந்து விடுபடுவதிற்கே எப்போதும் முயற்சி செய்வோம் அதற்கு காரணம் என்னவெனில் எமக்கு பல பிரச்சனைகள் மிக வேகமாக எம்மை அணுகுவதுதான். அத்துடன் தனிமனிதனின் பிரச்சனைகளை தனிமனிதனே கையாளவேண்டிய நிலையின் தன்மை நவீன உலகில் அதிகரித்து செல்வதுடன் பிரச்சனைகளும் புதிய பரிமாணங்களுடன் வருவதும்தான். அதற்கு உலகலாவிய கொரோன தொற்றும் ஒரு காரணம். Ottawa சாசனத்தில் குறிப்பிட்டது போன்ற ஐந்து முக்கிய விடயங்களான ஆரோக் கியமான பொதுக் கொள்கையை உருவாக்குதல், ஆரோக்கியத் திற்கான ஆதரவான சூழல்களை உருவாக்குதல், ஆரோக்கியத்தி ற்கான சமூக நடவடிக்கைகளை வலுப்படுத்துதல், தனிப்பட்ட திறன்களை வளர்ப்பது மற்றும் சுகாதார சேவைகளை மீண்டும்

நோக்குநிலைப்படுத்துதல் போன்றவற்றை ஏற்படுத்த வேண்டிய தேவை கொரோனாவுடனான புதிய இயல்பு வாழ்க்கைக்கு தேவையாக உள்ளது.

இவ் மேம்பாடு நடவடிக்கையானது கொரோனா தொற்றுக்கு மட்டுமல்லாது இது போன்ற பல நோய்களை எதிர்காலத்தில் கையாள பெரிய உதவியாக அமையும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

# 07

# வடக்கின் கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதில் உள்ள சவால்கள்

உலகலாவிய கொரோனா தொற்று எதுவித மாற்றங்கள் இன்றி தொடர்ந்து பரவி வருகின்றது. தொற்று ஆரம்பித்ததில் இருந்து அதிகூடிய நோயாளிகளை பதிவு செய்த வாரமாக இவ்வாரம் அமைந்துள்ளது. இத் தொற்றானது சகல நாடுகளையும் பராபட்சம் இன்றி தாக்கி வருகின்றது. குறிப்பாக ஆபிரிக்க நாடுகளும் இலத்தின் அமெரிக்க நாடுகளும் தற்போது இத் தொற்றின் தாக்கத்தில் இருந்து விடுபடுவதற்காக போராடி வருகின்றன. இவற்றின் முக்கியமான விடயம் என்னவெனில் இவ் நாடுகளில் பெரும்பாலானவை அடிப்படை சுகாதார கட்டமைப்புகள் மிகவும் விருத்தியடையாது சாதாரண சுகாதார பிரச்சனைகளையே கையாளமுடியாத நிலையில் உள்ளவை. இவற்றில் கொரோனாவின் தாக்கம் பெரும் பேரழிவை ஏற்படுத்தக்கூடும். இதில் பலநாடுகளில் தொற்றானது இவ்வாரத்தில் மேலும் அதிகரித்து உள்ளது. எமது அண்மை நாடான இந்தியாவிலும் கொரோனா தொற்று இன்னும் கட்டுக்கு வரவில்லை. எனவே உலகம் தொடர்ந்து கொரோனா தொற்றுடன் அல்லாடிக் கொண்டு தான் இருக்கின்றது. உலகசுகாதார நிறுவனத்தின் கருத்துப்படி தடுப்பூசி பரிசோதனைகளில் குறிப்பிடத்தக்களவு வெற்றி கிடைத்துள்ளது. கண்டுபிடிப்பு பரிசோதனைகளின் படிமுறைகளில் பாதி படிமுறைகள் வெற்றிகரமாக அமைந்துள்ளன. மேலும் பரிசோதனைகள் வெற்றியளிக்கும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆனாலும் தடுப்பூசி பாவனைக்கு வருவதில் இன்னும் கால தாமதம் காணப்படுகின்றது. 2021ஆம் வருடத்தின் ஆரம்பத்தில்தான் தடுப்பூசிகளை மக்களுக்கு கிடைக்க செய்யமுடியும் என உலக சுகாதார நிறுவனம் கருதுகின்றது. எனவே இன்னும் சில மாதங்களுக்கு சாதாரண தொற்றுநோய் தடுப்பு முறைகளை கைக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உலகம்

உள்ளது. எனவே இதனை கைக்கொள்வதில் மக்களிடையே உலகளாவிய ஒற்றுமையும் பொறுப்புணர்வும் தேவைப்படுகின்றது. இது நோய் பரவாது தடுப்பதில் இருந்து, நோய்யால் பாதிக் கப்பட்டவரை கண்டுபிடிக்க அவருடன் தொடர்பில் உள்ளவரை கண்டுபிடிக்க, அவர்களை சரியாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி தேவையான பரிசோதனைகளை செய்து சரியான சிகிச்சையினை வழங்க உதவுவது வரை தேவைப்படுகின்றது. இதனை எவ்வாறு நடைமுறை படுத்துகிறோம் எனப்பதிலேயே இவ் தொற்றின் தாக்கங்கள் மற்றும் விளைவுகள் தங்கியுள்ளன.

இலங்கையை பொறுத்தவரை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இரண்டாயிரம் அளவில் காணப்படுவதுடன் இவ் நோய்யால் இறந்தவர்கள் பதினோரு பேர் மட்டுமே. பலநாடுகளில் ஏற்பட்ட தாக்கத்துடன் ஒப்பிடுகையில் தாக்கத்தின் அளவு குறைந்தளவில் காணப்படுகின்றது. அத்துடன் கண்டுபிடிக்கப்பட்ட நோய் கொத்துகளில் கடைசி நோய் கொத்தை விட ஏனைய நோய் கொத்துக்கள் முழுவதும் கட்டுப்படுத்தப் பட்டுவிட்டன. எனவே மக்கள் மத்தியில் நோயை பற்றிய பயம் குறைந்துவருவது அவதானிக்க முடிகின்றது. இதனால் மக்கள் தொற்றை தடுக்கக்கூடிய வழிமுறைகளை கைக்கொள்வதில் அக்கறை காட்டும் தன்மை படிப்படியாக குறைந்து வருகின்றது. இதற்கு முதல் காரணம் நாம் இம்மக்களில் நோயை தடுப்பதற்குரிய வழிமுறைகளை கைக்கொள்வதை நிரந்தர நடத்தை மாற்றமாக மாற்றமுடியாமல் போனமையாகும். தொற்றை கட்டுப்படுத்துவதில் நாம் ஓரளவு வெற்றி கண்டாலும், நிரந்தர நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவதில் நாம் வெற்றிகாண முடியவில்லை. நாம் பொதுவாக தடுப்பு நடவடிக்கைகளை பயத்தை ஏற்படுத்துவதன் மூலமே நடைமுறைப்படுத்த விளக்கின்றோம். இது கொரோனா போன்ற நோய்களை கட்டுப்படுத்த உதவாது. நம் எல்லோர் முன்னும் உள்ள சவால் என்னவெனில் எவ்வாறு பொறுப்புணர்ந்து செயற்படும் தன்மையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவது. புதிய கொத்து களுடன் நோய்யாளிகள் கண்டுபிடிக்கப்படும் போது அதைக்கண்டு சில நடவடிக்கைகளை கைக்கொள்வதும் அதுபற்றிய அச்சம்

குறைந்தவுடன் பழைய நிலைக்கு செல்வதும் என வாழ தலைப்பட முற்படுகின்றோம். மக்களின் சிந்தனை ஒட்டத்தில் நிரந்தர மாற்றத்தை கொண்டுவரக்கூடிய தொடர் பொறிமுறை ஏற்படுத் துவதில் எமது நோய்த்தடுப்பு கட்டமைப்புகள் செயல்திறன் மிக்கவையாக இல்லை. கொரோனா தொற்று ஆனது எமக்கு அதன் தேவையை உணர்த்தியுள்ளது. ஆனால் எமக்கு அதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பதில் தெளிவின்மை காணப்படுகின்றது.

செயல்திறன் உள்ள கட்டமைப்புகளை எவ்வாறு கட்டியெழுப்புவது இதனை யார் செய்யலாம் என்பதிலும் குழப்பம் காணப்படுகின்றது. இதனை சுகாதார திணைக்களமோ அல்லது அரசாங்கமோ அதுசார்ந்த கட்டமைப்புகளோ மாத்திரம் செய்யமுடியாது. இதற்கு சமூகம் சார்ந்த கட்டமைப்புகள் முக்கியமாக தேவைப்படுகின்றது. சமூகம் சார்ந்த அமைப்புகள் என பார்க்கும்போது கிராமங்களில் இயங்கும் கிராமமட்ட அமைப்புகள் மட்டுமின்றி சமயம் சார் அமைப்புகளும் முக்கிய பங்கு ஆற்றவேண்டியுள்ளது. இதனை செய்வதில் எமது நாட்டை பொறுத்தவரை சமயங்கள் சார் வழிபாட்டு இடங்கள் மற்றும் மத வழிபாட்டு விழாக்கள் முக்கியமானவை அத்துடன் பெரும்பாலான மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. எனவே அவற்றின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது. எனவே அவற்றை எவ்வாறு சரியான முறையில் நோய்த்தடுப்பு செயற்பா டுகளுக்கு பயன்படுத்தலாம் என்பதற்குரிய செயற்பாட்டு உத்தி வகுக்கப்படுதல் முக்கியம்.

வடமாகாணத்தை பொறுத்தவரை நடைபெறும் மாதங்கள் மதவழிபாட்டு தளங்களின் திருவிழாக்கள் நடைபெறுகின்ற காலமாக காணப்படுகின்றது. நாம் இவ் திருவிழாக்களை எவ்வாறு நடாத்தலாம் என பல கூட்டங்கள் வைத்து கலந்துரையாடல்கள் நடைபெறும்போது இத்திருவிழாக்களின் ஊடாக மக்களுக்கு என்ன நன்மையான விடையங்களை வழங்கப்போகின்றோம் என சிந்திக்க வேண்டிய கடமை நாமெல்லோரிட்கும் உண்டு. நாம் பெரும்பாலும் இதனைப்பற்றி சிந்திப்பது இல்லை. இந்தசிந்தனை மாற்றம்

கொண்டுவருவது காலத்தின் தேவையாகும். அநேகமாக நாம் எத்தனை பேரை திருவிழாவுக்கு அழைக்கலாம் எவ்வாறு சடங் குகளை சரியாக செய்து முடிக்கலாம் என்பதிலேயே முழுக் கவனத்தையும் கொண்டிருக்கிறோம். ஆனால் இவ் விழாக்கள் ஏற்படுத்தப்பட்டதற்கான சில அடிப்படைக் காரணங்களை பற்றி சிந்திக்க மறந்து விடுகின்றோம். இவ் திருவிழாக்களும் மாதவழிபாட்டு முறைகளும் எமது வாழ்க்கையை சந்தோசமாகவும் ஆரோக்கியத்துடன் கொண்டுசெல்லவே ஏற்படுத்தப்பட்டன. நாம் பெரும்பாலும் அதனை கருத்தில் எடுக்க தவறி விடுகின்றோம். காலத்திற்கு ஏற்ப சூழ்நிலைக்கு ஏற்ப மக்களை வழிப்படுத்தி சரியாக கொண்டுசெல்வதற்கே வழிபாட்டு தளங்கள் எமது முன்னோரால் ஏற்படுத்தப்பட்டன என்பதை நாம் எப்போதும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எனவே வடக்கின் அடையாளமாக விளங்கும் நல்லூர் ஆலய உற்சவம் ஆரம்பித்துள்ள இக்காலகட்டத்தில் நாம் கொடிய கொரோனா தொற்றில் இருந்து எமது சமூகத்தை பாதுக்காக்ககூடிய வழிமுறைகளை மக்களுக்கு எடுத்துச்சொல்ல இவ்விழாக்களை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றி சிந்தித்து அதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்த முற்படுவது எமது சமூகத்தை பெரிய அழிவுகளில் இருந்து பாதுகாக்க உதவும். விழாக்காலங்களில் மக்களை ஒன்றுகூடாது தடுப்பது மட்டுமின்றி அவர்களை ஆலய வழிபாட்டின் நன்மைகளை கிடைக்க செய்ய அவர்களின் மனங்களில் மாற்றத்தை கொண்டுவந்து அதனூடாக பெறவேண்டிய ஆன்மீக பலத்தை பெற்றுக்கொள்ள உதவுதல் நம் எல்லோரினதும் கடமையாகும்.

இதற்கு ஆலயம்சார் அமைப்புகள் காலத்தின் தேவைக்கு ஏற்ப வழிநடாத்தப்பட்டு அவர்கள் மக்களை வழிநடத்தக்கூடிய தன்மையை ஏற்படுத்தவேண்டும். எல்லா சமூக, சமய பெரியார்களும் இதனை செவ்வனே செய்வதற்கு சுகாதாரம்சார் பொறுப்புள்ள அனைவரும் உதவுதல் அவசியம்.

# 08

# கொரோனாவின் இரண்டாவது அவஸ்தையும் வடமாகாணமும்

கொரோனா தொற்றானது உலகாளாவிய ரீதியாக தனது தொற்றுத் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்தாது தொடர்ந்து செயற்படுவதை அவதானிக்க முடிவதுடன் அதனை கட்டுப்படுத்துவதோ அல்லது நோயாளர்களை சிகிச்சையளிப்பதிலோ முன்னேற்றகரமான மருத்துவ முறைகளின் குறிப்பிடக்கூடிய கண்டுபிடிப்புகள் இன்றியும் தொடரும் சூழலே காணமுடிகிறது.

அத்துடன் இறப்புக்களின் எண்ணிக்கையும் புதிதாக நோயுடையவராக அடையாளப்படுத்தப்படுவர்களின் உலகளாவிய எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை. இதனால் நிச்சயம் அற்ற தன்மையானது இன்னும் தொடர்ந்துகொண்டு உள்ளது. எனவே கொரோனா தொற்றுபற்றிய பரபரப்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் இன்னும் குறைவின்றி காணப்படுகின்றது. இது ஒருவகையில் மக்களின் நடத்தை மாற்றத்தை தொடர்ந்து ஏற்படுத்துவதற்கும் ஏற்பட்ட  நடத்தை மாற்றத்தை தளர்வின்றி கைக்கொள்ள வைப்பதற்கும் தேவையான ஒன்றாக காணப்படுகின்றது. ஆனால் ஏற்கனவே உலக சுகாதார நிறுவனம் உட்பட பலதரப்பாலும் பிரச்சனையாக கொள்ளப்படும் விடையம் என்னவெனில் அளவுக்கு அதிகமான தகவல் பரிமாற்றமும் கொடுக்கப்படும் தகவல்களின் உண்மை தன்மையை கண்டறிவதில் உள்ள சிக்கலுமாகும். கடந்த வாரம் மிகபெருமளவில் கதைக்கப்பட்ட விடயம் கொரோனாவின் இரண்டாவது அலை பற்றியதாகும். இவ் விடயம் இலங்கையில் பேசுபொருளாக இன்னொரு விடயமும் காரணமாகும். அது என்னவெனில் இந்தியாவில் கொரோனா தொற்றின் அதிகரிப்பும் அதனால் ஏற்பட்ட இறப்புக்களும் ஆகும். இந்தியா தனது அதிகூடிய கொரோனா இறப்பாக இரண்டாயிரத்தை பதிவு செய்து உலக

இறப்புக்களின் எண்ணிக்கையை ஐயாயிரத்தை தாண்ட வைப்பதற்கு காரணமாக இருந்தது. எப்போதும் இந்தியா போன்ற பெரிய நாடுகளில் ஏற்படும் மாற்றம் அண்மையில் உள்ள சிறிய நாடுகளான இலங்கை போன்றவற்றில் தாக்கம் செலுத்துவது தவிர்க்க முடியாதது.

இதனால் இங்குள்ள பலரும் இதன் தாக்கம் எவ்வாறு இருக்கப்போகிறது என்பதில் தெளிவின்றி காணப்படுவதும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றிய கவலையுமே எமக்கும் வந்து விடுமோ என்ற பயத்தை ஏற்படுத்துகின்றது.

முதலில் கொரோனாவின் இரண்டாவது அலை ஏற்பட லாமா என்பது பற்றி பார்ப்போமானால். நான் ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி கொரோனா தொற்று தொடர்பில் இன்னும் மனிதரில் நோய் தொற்று அதன் பரம்பல் அது மனிதஉடலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் போன்ற விடயங்களில் பூரண தெளிவு இன்னும் ஏற்படவில்லை. இதனால் தான் இன்னும் தொற்றானது மக்கள் மத்தியில் ஏற்படுவதை கட்டுப்படுத்த முடியவில்லை.

உலகளாவிய வைரஸ் தொற்றுகள் பொதுவாக கொரோனா வகை வைரசுக்களினால் அல்லது இன்புளுவென்சா வைரசுகளால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கொரோனவால் ஏற்படுத்தப்பட்ட SARS எனும் உலகளாவிய தொற்றானது 2002 மற்றும் 2003 ஆண்டளவில் சீனாவில் இருந்து ஏற்பட்டு 26 நாடுகளில் பத்தாயிரத்திற்குட்பட்ட நோயாளர்களுடன் அவ் தொற்று கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. ஆனால் அது இறப்புகள் ஏற்படுவதில் வீரியம் கூடியதாக காணப்பட்டது. ஆனால் இவ் வைரசைப்போன்று தொடர்ந்து தொற்றுகளையும் இறப்புகளையும் தொடர்ந்து ஏற்படுத்தவில்லை.

பொதுவாக தொற்றுவிஞ்ஞானவியலில் ஒரு தொற்று நோய்யானது தனது அதிகூடிய உச்ச தாக்கத்தை படிப்படியாக

அதிகரித்து ஒரு உச்சநிலையை அடைந்த பின்னர் படிப்படியாக குறைவது வழமை. உச்சநிலையை அடைவது என்பது தடுப்பு நடவடிக்கைகளில் தங்கியுள்ளது. தற்போதைய COVID 19 தொற்று கொரோனா வைரசினால் ஏற்பட்டு இருந்தாலும் அதனுடைய பரவலானது இன்ப்ளூவென்சா வைரசு போன்று பெருமளவு மக்களை தாக்குவதும் பரவலானது ஒவ்வொரு நாடுகளிலும் வெவ்வேறான நோய் பரம்பல் நிலையை ஏற்படுத்துவதும் இது பற்றிய பூரண அறிவை பெற்றுக்கொள்வதுடன் இதுபற்றிய எதிர்வுகூறல்களை மேற்கொள்வதில் சிக்கல் நிலையும் காணப் படுகின்றது. எனவே இரண்டாம் அலை பற்றிய எதிர்வு கூறல் என்பது இக் கொரோனாவின் பரம்பலை வைத்து கூறமுடியாது. இலங்கையை பொறுத்தவரை இன்னும் நோயாளர்கள் கண்டறியப்பட்டுக்கொண்டு இருகிறார்கள்.

அத்துடன் இலங்கையில் சமூக பரம்பலின்றி தொற்று நிலைமை சமூகத்தில் அதிகூடிய நிலையை அடையாது கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. இதற்கு இது ஒரு சிறிய தீவாக நிலத்தொட ர்புகள் அற்று இருப்பதும் ஒரு காரணமாகும். ஆனால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சில சட்டத்திற்கு மாறான கடல் நடவடிக்கைகள் காணப்படுவது பல காலம் தொட்டு காணப்படும் விடயம். அத்துடன் அங்கு நோய்பரம்பலுடன் அதற்கான தடுப்பு நடவடிக்கைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதால் பொருளாதார நிலைமைகளில் சாதாரண மக்களுக்கு சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது. இவ் நிலைமையும் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளில் மக்களை ஈடுபடத்தூண்டும். இதன் காரணமாகவே மேற்கூறிய அச்ச நிலைமையானது இங்கு ஏற்பட்டுள்ளது. எனவே இதுபற்றி சகல தரப்பினரும் விழிப்பாக இருத்தல் வேண்டும். அது மட்டுமின்றி கரையோரப்பகுதிகளில் வசிப்போர் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவது முக்கியமானது. ஆனால் இதில் காணப்படும் சிக்கல் தன்மையை உணர்ந்து அதற்கு ஏற்ற மூலோபாயங்களை அதற்குரிய பகுதியினர் மேற்கொள்வது முக்கியமானது.

வடமாகாணத்தை பொறுத்தவரை இந்தியாவிற்கு அண்மையில் இருப்பதுடன் காலம் காலமாக இவ்வாறான நடவடிக்கைகளில் மக்கள் சாதாரணமாக ஈடுபடுவது பற்றி சகலரும் அறிந்துள்ளனர். அதுமட்டுமின்றி யுத்தகாலத்தில் பலர் இவ் மார்க்கத்தின் ஊடாக இந்தியாவிற்கு அகதிகளாக சென்றமையும் அவர்களில் பலர் அங்கு இன்னும் தொடர்ந்து வசித்து வருவதும் இவ்வாறான நடவடிக்கைகளை அதிகரிக்க செய்ய சாத்தியம் கூடுதலாக உள்ளது.

எனவே வடமாகாணத்தை பொறுத்தவரை இதுசம்பந்தமான போதிய விழிப்புணர்வானது மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படுவது முக்கியமானது. இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் ஓரளவு அவர்களது சமூகத்தை இது பற்றிய தகவல்கள் வெளியே செல்லாது கட்டுப்படுத்தக்கூடிய வல்லமை உடையவர்களாக இருப்பதும் இவ்வாறான விடயங்கள் வெளிய வராமல் தடுக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகளை கூட்டுகின்றது. அதுமட்டுமின்றி சில அதிகாரிகளும் இவ்விடயங்களை கையாள்வதில் உள்ள ஆபத்து காரணமாக அதனை கண்டும் காணாமல்விடும் நடவடிக்கைகளும் காணப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் நோயுடைய ஒருவர் எம்பகுதியினுள் வந்தால் தெரியாமல் போவதுடன், அவ்வாறான நோயாளி பற்றிய தகவல்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும். இது சமூகத்தில் நோய் பரம்பல் ஏற்படுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும். எனவே இதன் பாரதூரத்தை கருத்தில் கொண்டு மக்கள் விழிப்புடன் இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை இயன்றளவு தெரியப்படுத்தல் காலத்தின் கட்டாயமாகும். எல்லோரும் சமூகப்பொறுப்பை உணர்ந்து செயற்படுவதன் ஊடாகவே இவ்வாறான விடயங்களை திறம்பட கையாள முடியும்.

# 09 வடக்கின் இரண்டாவது அலை பீதியும் கொரோனாத் தடுப்பும்

கொரோனா தொற்றானது உலகலாவிய ரீதியாக அதன் தாக்கத்தை தொடர்ந்து கொண்டு இருக்கையில் அதனை வெற்றிகரமாக கட்டுப்படுத்த சிலநாடுகள் முயன்று அதில் ஓரளவு வெற்றி கண்டிருந்தாலும்; இன்னும் முழுமையான வெற்றியை தக்க வைக்க முடியாது திணறுவதை அவதானிக்க முடிகிறது. பல நாடுகள் இன்னும் கட்டுப்படுத்த முடியாது திணறிக்கொண்டுதான் இருக்கின்றன. இத் தொற்று இன்னும் ஒரு இரண்டு வருடங்களிற்கு தொடரக்கூடும் என உலகசுகாதார நிறுவனத்தின் வல்லுநர்கள் தற்போது கூறத் தொடங்கி விட்டனர். தடுப்பூசி கண்டு பிடிக்கப் பட்டாலும் அதனை எல்லா மக்களுக்கும் கிடைக்க செய்யக்கூடிய தன்மையை பற்றிய கேள்வியும் தடுப்பூசியின் கட்டுப்படுத்தும் திறன் பற்றிய கேள்வியும் இன்னும் கொரோனா தடுப்பில் உள்ள சிக்கலை உலகிற்கு உணர்த்த விளைகின்றன. ஆனால் உலக சுகாதாரநிறுவனம் பரிந்துரைக்கும் ஒருமித்த தொற்று நோய்க்கான தடுப்புமுறைகளை கைகொள்ளுவதில் பெரும்பாலான நாடுகளின் அரசாங்கங்களும் மக்களும் ஒருமித்து வேலை செய்வதில் பல சிக்கல்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் குறிப்பிடுவது போன்று இந் நோயை அல்லது மனித குலத்திற்கான பொது எதிரியை கட்டுப்படுத்த உலகளாவிய ஒற்றுமையும் நாட்டினுள் பலதரப்பினரிடம் ஒற்றுமையும் மிகவும் முக்கியமானது. ஆனால் இவ் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் உலகத் தலைமைகள் இன்னும் வெற்றியடைய வில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். இந் நோய் உலகின் ஒருமூலையில் பரவிக்கொண்டிருந்தால் அது எவ்வேளையிலும் உலகளாவிய ரீதியான தொற்றாக மாறமுடியும் எனவே உலகளாவிய ஒற்றுமை இல்லாமல் இந் நோயை கட்டுப்படுத்தமுடியாது. ஆனால்

உலகின் பெரியநாடுகளின் தலைவர்கள் அதனை கவனத்தில் கொள்வதாக இல்லை.

இது இவ்வாறு இருக்க இலங்கையில் ஓரளவு கட்டுக்குள் இருந்த தொற்று கடந்த வாரம் கந்தகாடு புனர்வாழ்வு மையத்தில் ஏற்பட்ட புதிய தொற்று பரம்பலை அடுத்து அது மீண்டும் கட்டுக்கு அடங்காமல் செல்கிறதா! என்ற உண்மையான பயம் பெருமளவான இலங்கை மக்களிடையே ஏற்பட்டுள்ளது. இவ் தொற்று கொத்து நிலை பரம்பலில் இருந்து ஒரு சமூக பரம்பலாக மாறிவிடக் கூடும் என்ற பயமும் ஒருபக்கம் ஏற்பட்டுள்ளது. இவ் பயம் நியாயமான ஒன்றாக காணப்பட்டாலும் இலங்கையில் தற்போது தேர்தல் பிரச்சார காலம் என்பதால் அதனை ஒற்றுமையாக தடுப்பதில் கவனம் செலுத்துவதில் அக்கறை செலுத்தாது இதனை ஒரு பேசு பொருளாக்குவதில் பலரும் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. முக்கியமாக இன்றைய உலகை வழிநடாத்தும் பங்கு ஊடகங்களினை சாரும். அவற்றுக்கு இந்நோயை கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் பெரும் பங்கு காணப்படுகின்றது. அதனை பல ஊடகங்கள் செய்யமுற்படுகின்றன. ஆனால் அது எவ்வளவு திறனுடன் மக்களை சென்றடைகிறது என்பது கேள்விக்குறியானது. நாம் எல்லோரும் பரபரப்பான செய்திகள் என்ற மாயைக்குள் மாட்டுப்பட்டு உள்ளதை அண்மைக்கால கொரோனா தொற்று பற்றிய செய்திகளை வெளிக்கொணர்ந்த விதத்தில் அவதானிக்க முடிகின்றது. இதனால் மக்களிடையே ஏற்படக்கூடிய தாக்கத்தை பற்றியும் அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளை பற்றியும் சிந்திக்க தவறுவதையும் காணக்கூடியதாக உள்ளது. இவ் செய்திகள் மக்களிடம் கொண்டு செல்வது முக்கியமானது அதனை கொண்டு செல்லும்போது அது என்ன வகையான எதிர்வினையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் என்பதை கருத்தில் கொண்டு செய்திகளை வெளியிடுவதும் செய்திகளை வெளியிடப்பட்ட பின்னர் அத்தாக்கங்களை குறைப்பதற்குரிய தகவல்களை அல்லது வழிகாட்டுதல்களையும் வழங்குவதில் கவனம் செலுத்துதல் முக்கியமானது.

உதாரணமாக இவ் வாரம் யாழ் பல்கலைகழக மாணவிகள் இருவர் பற்றிய செய்திகள் ஊடகங்களில் மிகமுக்கியமான கொரோனா பற்றிய செய்திகளாக பிரசுரிக்கப்பட்டன. ஒரு மாணவியின் சகோதரர் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் வருகைதரு விரிவுரையாளாராக பணியாற்றியதால் கொரோனா தொற்று இருப்பதை உறுதிப்படுத்தியவுடன் அவ் மாணவியும் அப்பீடத்தை சார்ந்த மாணவர்களும் சில விரிவுரையாளர்களும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர், பின்னர் அவ் மாணவிக்கும் அவரின் குடும்ப உறுப்பினர்களிற்கும் பரிசோதனைகளின் மூலம் தொற்று இல்லை என்பதை உறுதிபடுத்திய பின்னர் சுகாதார துறையின் சில அறிவுறுத்தல்களுடன் அவ் தனிமைப்படுத்தல் விலக்கப்பட்டது. இன்னொரு மாணவிக்கு சாதாரண இருமல் காய்ச்சல் இருந்ததுடன் அவர் இவ் புனர்வாழ்வு முகாமில் இருந்து சில கிலோ மீற்றர்கள் தூரத்தில் இருந்து பொதுப்போக்குவரத்து பாவித்து வந்தமையால் கொரோனா தொற்று இல்லையென்பதை உறுதிப்படுத்த பரிசோதிக்கப்பட்டு நோய்யில்லையென உறுதிப்படுத்தப்பட்டார். இவையெல்லாம் எமக்கு சாதாரண செய்திகள் ஆனால் இவற்றின் பின்னால் பலரின் மற்றும் நிறுவனங்களின் சமூக உளநலம் சார்ந்த விடயங்கள் உள்ளன என்பதை நாம் எல்லோரும் உணர மறக்கின்றோம். இது ஒரு கவனிக்காது விடப்படக்கூடிய விடயம் அல்ல. இதனை கவனத்தில் எடுக்காது விடுவதன்மூலம் பல வடுக்களை கொண்ட சமூகத்தை நாம் உருவாக்குவதற்கு காரணமாக அமைகின்றோம். பொறுப்புள்ள அனைவரும் இதனை கவனத்தில் கொள்வதும் இதனை ஏற்படாது பார்த்துக்கொள்வதும் மிகவும் முக்கியமானது. இதனை செய்வதற்கு ஊடகங்களின் உதவியும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியமானது. அதுமட்டுமன்றி இதுபற்றிய கருத்துக்களை ஊடகங்களின் ஊடக கொண்டுவருவதற்கு அத்துறை சார்ந்தவர்களின் ஒத்துழைப்பும் அவசியமானது. இதனைப்பற்றி மேலும் ஆழமாக ஆராய்வது முக்கியம். இவ்வாறான ஆதரவு எல்லா மக்களிற்கு கிடைக்க செய்தால்தான் கொரோனா போன்ற கொடிய தொற்றுநோயில் இருந்து எம்மை விடுவிப்பதற்கு நாம் எல்லோரும் ஒற்றுமையாக செயற்பட முடியும்.

# 10 கொரோனாவின் தொடர் தாக்கமும் வடமாகாணமும்

உலகளாவிய ரீதியில் கொரோனவால் ஏற்படும் இறப்புக ளின் எண்ணிக்கை சற்று நான்காயிரத்தை விட குறைந்து ஒரு தணிவுத்தன்மையை இவ் வாரத்தின் இறுதி சில நாட்களில் அவதானிக்க முடிந்தது ஆறுதல் அளித்தாலும், உலகளாவிய ரீதியாக புதிதாக கண்டறியப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை யானது ஒரு இலட்சத்தினை விட கூடுதலாக காணப்படுவதுடன் ஒருநாளில் ஒரு இலட்சத்து முப்பதினாயிரத்திற்கு மேலான நோயாளிகளை கண்டறியப்பட்டதையும். அவதானிக்க முடிந்தது. கூடுதலாக நோயாளிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு எல்லா நாடுகளிலும் கொரோனாவிற்குரிய பரிசோதனைகள் வசதிகள் அதிகரிக்கப்பட் டமையை ஒரு காரணமாக கருதினாலும் இன்னும் அதன் தாக்கம் குறையாமல் தொடர்வதை புறக்கணிக்க முடியாது. இதே நேரம் உலகமானது கொரோனவை தடுப்பதற்காக கடந்த சில மாதங்களாக நடைமுறைபடுத்திய தடுப்பு நடவடிக்கைகளில் படிப்படியாக தளர்த்தி வருவதுடன் சில நாடுகள் ஓரளவு முழுமையான தளர்வுக்கு செல்லும் நிலைமையையும் அவதானிக்க முடிகின்றது. ஒருபக்கம் நோயின் தாக்கம் தொடர்கையில் இன்னொருபக்கம் கட்டுப்படுத்தலில்தளர்வுகள் ஏற்படுத்தப்ப டுகின்றன இது எவ்வாறான நிலைமைக்கு உலகத்தை இட்டுச் செல்லப்போகின்றது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அத்துடன் இதனை எவ்வாறு கையாளப்போகின்றோம் என்பதிலும் ஒரு தீர்க்கமான முடிவுகள் எடுக்காது சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு எடுக்க வேண்டியநிலையும் ஏற்பட்டுள்ளது. பொதுவா தெற்காசியா ஆபிரிக்க மற்றும் இலந்தினை மேரிக்கா நாடுகளில் இதன் தாக்கமானது தனது அதியுச்ச தாக்கத்தை இவ் நாட்களில் ஏற்படுத்தி வரும் வேளையில் ஐரோப்பிய நாடுகளில் தாக்கம் குறைந்து வருகின்றது. இது ஒரு அலை போன்று படிப்படியாக

நாடுகளை தாக்கி வருகின்றது. இதனால்தான் இவ் அலையானது ஒருதடவையுடன் முடிந்துவிடுமா அல்லது இன்னும் பல அலை களை ஏற்படுத்துமா அவ்வாறு ஏற்படுமானால் எத்தனை அலைகள், அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என பல கேள்விகள் விடை காணப்படாது அதனை எதிர்கொள்ளவேண்டிய நிலையை இவ் கொரோனா வைரசானது உலகத்தை இட்டு சென்றுள்ளது. இதற்கு இலங்கையோ வடமாகாணமோ விதிவிலக்காக அமைய முடியாது.

இலங்கையை பொறுத்தவரை கொரோனாவின் தாக்கம் சற்று தணிந்து காணப்படுவதுடன் புதிதாக அடையாளப்படுத் தப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையிலும் ஒரு தளர்வு காணப் படுவதை அவதானிக்க முடிவதுடன் புதிதாக இறப்புகள் எதுவும் இன்றி காணப்படுவதும் மிகவும் ஆறுதலான விடையமாகும்.

இலங்கையை பொறுத்தவரை இது மிகவும் முக்கியமானது. ஏனெனில் இலங்கையானது ஓரளவு முடக்கல் நிலையை தளர்த்தி பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில் இவ்வாறான நிலைமை இருப்பதுடன் அதனில் எதுவித பாதிப்பும் இன்றி தொடர்ந்து பேணுதல் முக்கியமானது.இதில் ஏதோவொரு சிறுபிழை ஏற்படுமாயினும் அது எம்மையெல்லாம் சடுதியாக பாதக நிலைமைக்கு இட்டுச்செல்ல வழிவகுக்கும் என்பதில் வேறு கருத்துக்கு இடமில்லை. ஆனால் எம்மில் எத்தனை பேர் ஒவ்வொரு நாளும் எமது வேலைகளை செய்ய முன்னர் இதனை மனதில் எடுத்துக்கொண்டு எமது கருமங்களை ஆற்ற விளக்கிறோம் என்பது மிகமுக்கிய கேள்வியாகும். எமது சூழலில் நடப்பவற்றை அவதானிக்கையில் அதனளவு குறைந்தளவு வீதத்தில் காணப்ப டுவதுடன் படிப்படியாக அவ்வாறு சிந்தித்து செயற்படுபவர்களின் அளவானது குறைந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. அத்துடன் எமது தேவைகள் முன்னுரிமைகள் மாற்றம் அடையும் போதும் எம்முன்னில் பல தேவைகளை செயற்படுத்த வேண்டி இருப்பின் அவற்றை முன்னுரிமை படுத்துவதில் உள்ள சிக்கல் எழும் போதும்

கொரோனா தடுப்புக்கு கொடுக்கப்படவேண்டிய முன்னுரிமை காலபோக்கில் குறைவடைய நேரிடுவது தவிர்க்க முடியாதது. ஆனால் கொரோனா தடுப்பிற்கு கொடுக்கவேண்டிய முக்கியத்துவத்தை வேறு விடயங்களை ஆற்றும் போது குறைக்க முற்படும் தன்மையானது மிகவேகமாக சமூகத்தின் பலமட்டக்களில் கைக்கொள்ளப்படுமாக இருப்பின் அது எமக்கு ஆபத்தை மிக கொண்டுவரக்கூடிய சாத்தியக் கூறுகள் இன்னும் எமது நாட்டில் காணப்படுகின்றது. இதனை சாதாரண பொதுமக்கள் மட்டுமின்றி பொறுப்புள்ள அரச அதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகள் மக்கள் பிரதிநிதிகளாக வர எத்தனிப்போர் மனதில் இருத்தி செயற்படுதல் அவசியமானது. இலங்கையை பொறுத்தவரை ஒரு பொது தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்தில் நாடு உள்ளதால் அதற்கான நடவடிக்கைகளில் கூடுதலான கவனம் செலுத்தப்படுவதை எல்லா மட்டத்திலும் அவதானிக்க முடிகிறது. இதில் தமது வெற்றியை எப்படியாவது பெற்று விடவேண்டும் என்ற ஆதங்கம் எல்லா தரப்பினரிடமும் அவர் சார்ந்தோரிடமும் காணப்படுவது இயல்பு. வெற்றி எனும் ஆசை கொரோனா என்ற தொற்று இருப்பதை மறக்குமாயின் இது மிகவும் ஆபத்தானது. எனவே எவராயினும் இதனை எப்போதும் மனதில் கொண்டு செயற்படுதல் அவசியமாகும். அது மட்டுமின்றி இது சம்பந்தமாக தமது தலைமைத்துவ பண்பை தம் சார்ந்தோரை சரியாக வழிநடத்துவதன் ஊடாக வெளிப்படுத்த முடியும். இதே உதாரணத்தை இன்னொரு பொது விடையமான வழிபாட்டு தளங்களில் வழி படில் ஈடுபடுவோரும் அதனை வழிநடத்துபவர்களும் உணர்ந்து செயற்படுதல் காலத்தின் தேவையாக உள்ளது. அனேகமாக வழிபாட்டு தளங்களின் வருடாந்த திருவிழாக்கள் நடைப்பெறும் மாதங்களாக தற்போதைய மற்றும் இனிவரும் மாதங்கள் அமையவுள்ளன.

இதுவரை காலமும் வழிபாட்டு தளங்களில் கூடுவது தடைப்படுத்தப்பட்டு இருந்தது. தற்போது குறிப்பிட்ட நபர்களுடன் நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாக வைத்து வழமை போன்று இவ் நிகழ்வுகளை நடாத்த விளைவது ஆபத்தானது. வடமாகாணத்தை பொறுத்தவரை இந்துக்களும் கிறிஸ்தவர்களும் கூடுதலாக வாழும் பிரதேசம். இங்கே தமது பிரதேச ஆலய வருடாந்த திருவிழாவிற்கு பலஇடங்களிலுள் பல்வேறு பணிகளின் நிமித்தம் வெளி இடங்களில் வாழ்பவர்களும் வந்து ஊராருடன் கூடி மகிழ்வது வழமை. கொரோனா தொற்று காரணமாக ஏற்கனவே சில வழிபாட்டுத்தளங்கள் அவற்றை தள்ளிப்போட்டுள்ளனர். சிலர் ஒருசில பேருடன் நடாத்தி முடித்துவிட்டனர். ஒருசிலரோ கொரோனா தொற்றை கருத்தில் கொள்ளாது வழமை போன்று நடாத்தியது பற்றிய தகவல்களும் உண்டு. நாம் எல்லோரும் வழிபாட்டுத்தளங்கள் எம்மை வழிப்படுத்த ஏற்படுத்தப்பட்டவை என்பதை கேட்டபோது மனதில் கொள்ளுதல் வேண்டும். கொரோனா போன்ற தொற்று பரவும் காலத்தில் எவ்வாறு மக்கள் நடந்துகொள்ள வேண்டும் என்ற வழிப்படுத்தலை வழிபாட்டுத் தலங்கள் மக்களுக்கு வழங்க வேண்டும். எவ்வாறான தடுப்பு முறைகளை எவ்வாறு கடைப்பிடிக்கலாம் என்பதை மக்களுக்கு செயல்முறையில் செய்து காட்டப்பட வேண்டிய இடங்களாக வழிபாட்டுத்தலங்கள் அமையவேண்டும். இதனைப்பற்றி அதற்கு பொறுப்போடு போர் கவனத்தில் எடுத்து இந்தவிடயம் மக்களை சென்றடைவதை உறுதி செய்தல் வேண்டும். மக்கள் வாழ்வுடன் ஒன்றிய வழிபடும் காலத்தின் தேவையாகும். இதனை கடைபிடிக்கா விட்டால் யாழ்ப்பாணத்தில் இவ்வாரம் ஏற்பட்ட பதட்டத்தை போன்று பல பதட்டங்களை நேர்கொள்ள ஏற்படும். மார்ச் மாதத்திற்கு முன்னர் வியாபார நோக்கத்திற்காக இந்தியாவில் இருந்து யாழ்பாணத்துக்கு புடவை விற்பதற்கு வந்த ஒருவர் கடந்த மே **31**ம் திகதி இந்தியாவில் அவரது சொந்த இடத்திற்கு அழைத்து செல்லப்பட்ட பின்னர் **3**ம் திகதி செய்யப்பட்ட பரிசோதனையில் கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டதின் பின்னர் இங்கு ஒரு பதட்ட நிலமை பலகேள்விகளுடன் ஏற்பட்டது அவதானிக்க முடிந்தது. முக்கியமாக இது வடமாகாண யாழ் மாவட்ட பொது சுகாதார துறையினரிற்கு மீண்டும் ஒரு சவால்

ஏற்படுத்தியதுடன் அவர் தங்கியிருந்த பகுதியில் வசிப்பவர்கள் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள், அவருடன் வியாபாரத்தில் ஈடுபட்டோர் அவரை போன்ற மற்றைய வியாபாரிகளிடம் கொள்வனவில் ஈடுபட்டோர் என பலரை பயத்திற்குட்படுத்தியதுடன், இவர்களில் சிலரை தனிமைபடுத்தலுக்கு உட்படுத்த வேண்டிய நிலையுடன் அவர்களை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டி நிலையும் ஏற்பட்டது. இதில் ஆறுதல் அளிக்க்கக்கூடிய விடையம் என்னவெனில் இதுவரை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட எவரும் நோயாளியாக அடையாளப்படுத்தப்பாடமையாகும். ஆனால் அவர்கள்கள் சிலகாலத்திற்கு தனிமை படுத்தலுக்கு உட்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்கள்களின் சில செயற்பாடுகளை மட்டுமின்றி அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை முடக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இதனை நாம் எப்போதும் கருத்தில் கொண்டு இதனால் ஏற்படும் ஆபத்துகளை உணர்ந்து நோயை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எவ்வேளையும் கடைப்பிடித்தல் நாம் எமக்கும் எமது சமூகத்துக்கும் செய்யும் மிகப்பெரிய தொண்டாகும் என்பதை சகலரும் சகல நடவடிக்கைகளின் போதும் மேற்கொள்ளல் இக்காலத்துக்கு சால பொருந்தும்.

# 11

# வடக்கு மக்களை விழிப்புடன் இருக்க வலியுறுத்தும் நாட்டின் அண்மைய கொரோனா தொற்று

உலகலாவிய கொரோனா தொற்றானது அதன் தாக்கத்தை தொடர்ந்து அதன் தாக்கும் வீரியத்தை படிப்படியாக கூட்டி சற்றும் சளைக்காது கட்டுப்பாடு இன்றி உலகின் பலபாகங்களிலும் அனர்த்தத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. உலகசுகாதார நிறுவனத்தை பொறுத்தவரை வைரசானது தனது தொற்றை முடுக்கிவிட்டுள்ளது. இது ஒரு நாட்டையும் விட்டுவைக்கவில்லை. தொடர்ந்து கட்டுப்பாடுகளை மீறி பரவல் தொடர்வது உலகை ஒரு கேள்விக்குறியான நிலைக்கு இட்டு சென்றுள்ளது. உலகின் பல சிறந்த சுகாதார அமைப்புகளை கொண்ட நாடுகளையே திணறடிக்க வைத்துக்கொண்டிருக்கிறது. இதனால் சுகாதாரபணியாளர்கள் தமது பணிகளை கொரோனா நோயாளிகளை பராமரிப்பதில் செலவிடுவதால் மற்றய சுகாதார பணிகளில் ஈடுபடுவதை தவிர்த்தோ அல்லது குறைத்துள்ளதால் பல பதிப்படையக்கூடிய குழுக்களான சிறுவர்கள் கற்பிணித் தாய்மார்கள் போன்றவர்கள் கவனிக்கப்படுவதில் தடங்கல்கள் தாமதங்கள் காணப்படுகின்றன. இதனால் பல தேவையற்ற இறப்புகள் பலநாடுகளிலும் ஏற்பட்டுக்கொண்டுள்ளன. அதுமட்டு மில்லாது காசநோய், எய்ட்ஸ் நோய் போன்றவற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் உலகலாவியரீதியாக பாதிக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் எவ்வாறு எம்மையெல்லாம் எதிர்காலத்தில் பாதிக்கப்போகின்றது என்பதுபற்றிய தெளிவின்மை சுகாதாரத்துறை சார்ந்தவர்களின் அக்கறையுடன் கூடிய கவலையாகும்.

ஒருபக்கத்தில் எமது ஆரோக்கியமான வாழ்க்கை கேள்விக் குறியாகிக் கொண்டிருக்கையில் இன்னொரு பக்கத்தில் எமது வாழ்விற்கு தேவையானவற்றை பெற்றுக்கொள்வதற்கான மனித குலத்தால் ஏற்படுத்தப்பட்ட, நவீன உலகின் மூலாதாரம்

எனக்கருத்தப்பட்ட பொருளாதாரம் எனும் கட்டமைப்பு இவ் கொரோனா உலகளாவிய தொற்று கேள்விக்குறியாகியுள்ளது.

உலகின் பல பழமைவாய்ந்த பிரபல்யமான பெரிய நிறுவனங்கள் தமது பணியாளர்களுக்கு மாதாந்த சம்பளங்களை வழங்க முடியாது திணறிக்கொண்டு இருப்பதுடன், பலரை வேலைகளில் இருந்து வெளியேற்றிக்கொண்டுள்ளன. இதில் உலகலாவியரீதியாக வேலையற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்றது இதனால் பலர் தேவையான உணவு உடை உறையுள் போன்ற அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்வதில் பலரும் திணறுவதுடன் உலகலாவிய ரீதியாக வறுமையின் நிலைமையும் இவ் வைரசு தொற்றால் அதிகரித்து செல்கிறது. இது உலகசுகாதார நிறுவனம் குறிப்பிட்டவாறு இவ் வைரசானது கொடியது அதுமட்டுமின்றி இது மனிதத்துவதற்கு எதிரானது.

நம்மில் எத்தனை பேர் இதனை பற்றி சரியாக புரிந்து வைத்துள்ளார்கள் என்பது கேள்விக்குறியாகும். எம்மில் பலரின் நடவடிக்கைகளை அவதானிக்கையில் எம்மில் பலரும் இவ் பிரச்சனையின் தாற்பரியத்தை சரியாக புரிந்திருக்கவில்லை என்பதை கண்கூடாக காணுவதுடன் இது ஒரு கவலையளிக்கும் விடையமாக காணப்படுகின்றது. இது சமூகத்தின் குறிப்பிட்ட மட்டத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது அல்ல இது ஒருவரின் தொழில் கல்வியறிவு தாண்டி அவர்களின் அணுகுமுறை நடத்தைமுறை சார்ந்தது. தற்போது கடந்த இரு நாட்களாக நாட்டில் ஏற்பட்ட புதிய கொரோனா நோய் கொத்து தற்போது நம்மில் பலரில் புதியவித பயத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த பல நாட்களாக எல்லாவற்றயும் மறந்து உலகில் நடக்கும் அவலங்களை மறந்து எமக்கு கொரோனா வராது, எமது நாட்டில் கொரோனத் தொற்று இல்லையென்று சொல்கிறீர்கள் எம்மை ஏன் தடுப்பு நடவடிக்கைகளை கைக்கொள்ள சொல்கிறீர்கள் என்ற கேள்விகளை கேட்டவர்கள் எல்லாம் இவ் நிகழ்விற்கு பின்னர் தமது கேள்விகளை தற்போது நோயாளர்களின் எண்ணிக்கையை எண்ணுவதிலும் இது

கொத்து பரம்பலா அல்லது இது சமூக பரம்பலாக மாறும்போல இருக்கு என அளவளாவ தொடங்கி யுள்ளனர். இதில் எத்தனை பேர் இவ் தொற்றை நாம் எவ்வாறு தடுக்கலாம், இவ்வாறான தொற்றுக்களை மேலும் பரவாமல் அல்லது இவ்வாறான புதிய கொத்துக்கள் ஏற்படாது தடுக்கலாம் என்பது பற்றி சிந்திக்கிறார்கள். எம்மில் எத்தனை ஊடகங்கள் இவ்வாறு மக்களை சிந்திக்கக் கூடிய தகவல்களை அல்லது கருத்துக்களை மக்களுக்கு செல்லக்கூடிய வகையில் வழங்குகின்றன. இவ் பிரச்சனைகளுடன் கூடிய தகவல்களும் பிரச்சனைகளுக்கான எதிர்வினைகளும் இவ் கொடிய வைரசை கட்டுப்படுத்தவோ அல்லது அதில் இருந்து எம்மை பாதுகாக்கவோமாட்டாது. இவ் புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்பட்டது போன்று எவ் இடத்திலும் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படலாம் என்பதை நாம் மனதில் கொண்டு அதற்கான தடுப்பு நடவடிக்கைகளை கைக்கொள்ள வேண்டும். அதனை விடுத்து இது வராது என்ற மனப்பாங்கில் தேவையற்றவிதத்தில் பல பொது இடங்களில் கூடுவதும் பாது காப்பு நடவடிக்கைகளை கைக்கொள்ளாது விடுவதும் இவ் கொடிய வைரசை தொடர்ந்து தொற்றுக்களை மக்களிற்கு ஏற்படுத்தி எம்மையெல்லாம் பல ஆபத்தான நிலையிற்கு இட்டு செல்லும்.

எனவே தொடரும் அபாயத்தை எப்போதும் மனதில் இருத்தி அதனை வெற்றிகொள்ள தொடர் நடவடிக்கைகள் அவசியமானது. சுகாதாரதுறையால் வழங்கப்படும் அறிவுறுத்தல் களை தேவையற்றதாகவோ அல்லது அவசியமற்ற பளுவாக கருதாது இது என்னையும் எனது சமூகத்தையும் பாதுகாக்கும் கடமையாக கருதவேண்டும். முக்கியமாக தேவையற்ற விதத்தில் கூட்டம் கூடுவதை தவிர்த்தல் வேண்டும். இது கூட்டம் கூடும் காலம் . கூட்டம் கூடுதலானது தேர்தல்பிரச்சரத்திற்காக இருக்கலாம், மத வழிபாடு சார்ந்ததாக இருக்கலாம், ஒரு மரண வீடாக இருக்கலாம் ஒரு திருமண வீடாக இருக்கலாம் கல்விகற்கும் இடமாக இருக்கலாம் என்ன முக்கிய காரணமாக இருந்தாலும் கூட்டம் கூடுதல் ஆபத்தானது என்பதை எப்போதும் மனதில் திருத்துதல்

ஒவ்வொரு மனிதத்துவம் உள்ளவர்களின் செயற்பாடாகும். அதனை விடுத்து நாம் இவ்வாறுதான் செயற்படுவோம் என்று நடந்துகொள்வது ஒரு எதிர்பாராது தொற்று ஏற்படும் போது எம்மையெல்லாம் மிகவும் ஆபத்தான நிலைக்கு இட்டுச் செல்வதுடன் எம்மையெல்லாம் பதட்டமடைய வைக்கும். நாம் ஏன் எம்மை இவ்வாறான நிலைக்கு இட்டுச்செல்லவேண்டும் என்பதை நாம் எல்லோரும் எம்மை கேட்கவேண்டிய தருணத்தில் வாழ்ந்துவருகிறோம் என்பதை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். தேவையற்றவிதத்தில் நாம் ஈடுபடும் நடவடிக்கைகள் நம்மை சுயதனிமைப்படுத்தல் உட்பட பல தேவையற்ற நடவடிக்கைகளுக்கு இட்டுச்செல்வதை தவிர்த்தல் அண்மைய உதாரணம் ஒரு பாடமாக அமையும். இவ் படிப்பினைகளை கருத்தில்கொண்டு எமது நடத்தையில் நீண்டகால மாற்றத்தை கொண்டுவருவது மாத்திரமே எம்மை இவ் கொடிய நோயில் இருந்து பாதுகாக்கும்.

12

# கொரோனாவிற்கு பின்னரான புதிய இயல்பு வாழ்க்கையும் வடமாகாணமும்

கொரோனா தனது உலகலாவிய தாக்கத்தில் சற்றும் சளைக்காது தனது தொற்றையும் அதனால் ஏற்படும் இழப்புக் களையும் தொடர்ந்துகொண்டிருப்பதை கடந்த வாரத்திலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. தற்போது மொத்தமாக 6 மில்லியனுக்கு மேலான நோயாளர்கள் பாதிக்கப்பட்டு இருப்பதுடன் மொத்த இறப்புகளின் எண்ணிக்கையானது நான்கு இலட்சத்தை அண்மிப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையிலும் அதன் தாக்கமானது ஆயிரத்து எழுநூறுகளை தண்டி செல்வதுடன் அதனால் மேலதிக இறப்புகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பானது நோயாளர்கள் இரண்டு மூலங்களில் இருந்து இனம்காணப்படுவதால் ஏற்பட்டது. கடந்த சிலநாட்களாக தனிமைப்படுத்தல் முகாமில் உள்ள கடற் படையினரே கொரோனா தொற்றுடன் அடையாளப்படுத்தப் பட்டனர். தற்போது அவர்களுடன் வெளி நாடுகளில் இருந்து கொண்டுவருபவர்களிலும் தொற்று கண்டுபிடிக்கப்படுவதால் தொற்றாளர்களின் எண்ணிக்கையானது சடுதியாக அதிகரிக்க நேரிட்டது குறிப்பாக கடந்த மே மாதம் 26 மற்றும் 27ம் திகதிகளில் நூறுக்கு மேற்பட்ட நோயாளர்கள் கண்டுபிடிக்கப் பட்டதுடன், நோயாளர்களை பராமரிக்க புதிய வைத்திய சாலைகளை ஏற் படுத்தவேண்டி வந்தது. அத்துடன் சிகிச்சையில் இருக்கும் நோயா ளர்களின் எண்ணிக்கையானது தற்போது அதிகரித்து செல்வதுடன் தற்போது அது தொளாயிரத்தை நெருக்கிக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இது ஏற்கனவே என்னால் முன்னர் குறிப்பிட்டது போன்று சிகிச்சையில் இருக்கும் நோயாளர்களின் எண்ணிக்கை நானூறில் இருந்து ஐந்நூறு வரையில்

காணப்பட்டபோது அதனை கையாளுவது சுகாதார துறையி னருக்கு இலகுவானது. நோயாளர்களின் எண்ணிக்கை சிகிச்சை நிலையங்களில் அதிகரிக்கும் போது அதனை கையாளுவதற்குரிய வளங்களும் ஆளணியினரும் கூடுதலாக தேவைப்படும். அத்துடன் தொற்றானது பரவுவதற்கான சாத்தியக்கூறுகளையும் அதிகரிக்கச் செய்யும். படிப்படியாக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வது ஒரு கவலையளிக்கக்ககூடிய விடயமாகும். இதில் ஒரு ஆறுதல் அளிக்கக்கூடிய விடயம் என்னவெனில் இவர்களில் பெரும்பாலானோர் அறிகுறிகள் ஏதும் இன்றி அல்லது குறைந்த ளவிலான அறிகுறிகளுடன் கண்டறியப்படுவதால் இவர்களை சிகிச்சையளிப்பது சுலபம். அத்துடன் இவர்களை கையாள குறைந்தளவிலான பராமரிப்பாளர்களை பயன்படுத்த முடிவதுடன் சாதாரண நோயாளர் விடுதிகளில் வைத்து பராமரிக்க முடியும். எவ்வாறு இருப்பினும் எண்ணிக்கையின் அளவு அதிகரித்து செல்வதை கட்டுப்படுத்துதல் முக்கியமானது. இதற்கு தற்போது சுகாதாரத் திணைக்களம் ஆனது புதிய மூலோபா யங்களை கையாள எத்தனிக்கிறது. அதாவது வெளிநாடுகளில் இருந்து வர இருக்கிறவர்களை தடுக்கமுடியாத நிலைமை காணப்படுவதால் அவர்களை குறைந்த அளவிலான தொற்றுடன் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கைகள் பற்றி கலந்துரை யாடப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அதவாது அவர்களை அந்த அந்த நாடுகளில் வைத்து பரிசோதித்த பின்னர் நாட்டினுள் கொண்டுவருதல். அத்துடன் விமான நிலையத்தில் வைத்து பரிசோதித்து உடனடியாக சிகிச்சை அளித்தல் என்பனவாகும். இவ்வாறான மூலோபாயங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதை இனிவரும் நாட்களில்தான் தெரியவரும்.

சுகாதார திணைக்களத்தின் தரவுகளின் படி சமூகத்தில் இருந்து கடைசியாக ஏப்ரல் மாதம் **30**ம் திகதிதான் கடைசி நோயாளி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். எனவே கடந்த முப்பத்தைந்து நாளுக்கு மேலாக சமூகத்தில் இருந்து நோயாளர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. இத்தரவின்படி கிட்டத்தட்ட இரண்டு

நோயரும்பு காலத்திற்கு மேலாக புதிய நோயாளி சமூகத்தில் இருந்து கண்டுபிடிக்கப்படாது இருப்பது நிம்மதியளிக்கக்கூடியதாக இருந்தாலும் மேல்குறிப்பிட்ட நிகழ்வுகள் எம்மை அவதானமாக இருக்க வேண்டிய தேவையை உணர்த்துகின்றது.

உலக சுகாதார நிறுவனத்தின் வைரசின் செயற்பாடு தொடர்பான கண்காணிப்பானது வைரஸ் தனது வீரியத்தையோ தொற்று ஏற்படுத்தக்கூடிய தன்மையிலோ மாற்றத்தை ஏற்படுத்த வில்லை என்பதை கோடிட்டு காட்டுகின்றது. ஆனால் உலக சுகாதார நிறுவனமானது வைரசின் தொற்று இன்னும் அதிகரிக் கலாம் என்ற அச்சத்தை பின்வரும் காரணங்களை கொண்டு வெளியிட்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று வைரஸா னது தனது இயல்பில் இன்னும் மாற்றத்தை கொண்டுவராத நிலைமையில் நாம் மனித நடத்தையில் ஏற்படுத்திய புதிய நடவடிக்கைகளில் தளர்வு ஏற்படுத்த விளைவதுடன் கடைப்பிடிக்க வேண்டிய மனிதநடத்தையை எம்மில் எத்தனை பேர் எவ்வளவு காலத்திற்கு தொடர்ந்து கடைபிடிப்பார்கள் என்பதில் ஐயமும் உள்ளது. இது வைரசிற்கு தனது தொற்றை இலகுவாக ஏற்படுத்த வழிவகுக்கும். பொருளாதார நடவடிக்கைகளுக்கு அமுல் படுத்தப்பட்ட தொடர் ஊரடங்கு நடவடிக்கைகளை தளர்த்து வதுடன் சமூகமுடக்கல் நடவடிக்கைகளும் தளர்த்தப்பட்டுக் கொண்டு வரப்படுகின்றது.

இதனை படிப்படியாக செய்தல் முக்கியமானது . ஆனால் மக்கள் தமது பொறுப்பை உணர்ந்து தமது நடத்தைகளில் மாற்றத்தை கொண்டுவருதல் மிகவும் அவசியமானது. நாம் கொரோனா தொற்றுக்கு முன்னர் எவ்வாறு வாழ்ந்தோமோ அவ்வாறு தான் வாழவேண்டும் என எண்ணுவது மிகவும் பிழையான விடையமாகும்.

இதனை பல வழிகளில் எடுத்துக்கூறினாலும் அதை உதாசீனம் செய்யமுயல்வதுடன் சிலநேரங்களில் அதனை

ஒருபொருட்டாக மதிக்காமை எம்மையெல்லாம் ஆபத்தில் கொண்டுபோய் விடும் என்பதை எப்போதும் மனதில் இருத்தல் வேண்டும். கொரோனாவிற்கு பின்னரான புதிய இயல்புவாழ்க் கைக்கு எம்மை பழக்கப்படுத்தல் மிகவும் முக்கியமானது. இது விடயமாக சுகாதார திணைக்களத்தினால் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளது. அதுமட்டும் இன்றி வடமாகாண சுகாதார திணைக்களத்தினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் இவ்வாறான நடவடிக்கைகள் எந்தஅளவிற்கு நடைமுறைப்படுத் தப்படுகின்றன என்பதை அவதானிக்கும் பொறிமுறைகளை ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் எவ்வள விற்கு மக்கள் மத்தியில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்பதை சரியான முறையில் கணிப்பிடுதல் முக்கியமானது. இதற்குரிய ஆய்வுகளை பல்கலைக்கழகங்கள் ஈடுபட்டு சுகாதார திணைக்களத் திற்கு ஏனைய திணைக்களங்களுக்கும் ஆதாரத்துடன் கூடிய தகவல்களை வழங்குதல் இவ் நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்கதாக மாற்ற வழிவகுக்குக்கும்.

வடமாகாணத்தை பொறுத்தவரை கிட்டத்தட்ட கடந்த இருமாதமாக சமூகத்தில் இருந்து நோயாளர்கள் கண்டுபிடிக்கப்ப டாததால் மக்கள் மத்தியில் கொரோனா பற்றிய கரிசனை பொதுவாக குறைந்து வருகிறது. உலகலாவியரீதியாகவும் இதைனை அவதானிப்பதுடன் எவ்வளவு காலத்துக்கு இதனை கடைப்பிடிக்கமுடியும் என்ற எண்ணமும் பலமட்டங்களில் காணப்படுவதை அவதானிக்கமுடிந்தாலும் இங்கு காணப்படும் சூழலானது பல மோசமான நடவடிக்கைகளை தன்னகத்தே கொண்டிருத்தல் வருத்தம் அளிக்கக்கூடியது. பொறுப்புள்ள சிலரே இலங்கையின் ஏனைய பகுதியில் பழையபடி எல்லாம் நடக்கின்றது ஏன் வடக்கில் மட்டும் கட்டுப்பாடுகள் என வினவுவதை அவதானிக்க முடிகிறது அது மக்கள்கூடும் சந்தையாக இருக்கலாம் மக்கள் பயணிக்கும் பொது போக்குவரத்தாக இருக்கலாம் பொது வியாபார நிலையமாக இருக்கலாம் அரச அலுவலகமாக இருக்கலாம், திருமண மண்டபங்களோ அல்லது மரண வீடோ

என்ன நிறுவனமோ நிகழ்வோ என்றாலும் கொரோனாவிற்கு பின்னரான புதிய இயல்பிற்கு செல்லுதல் அவசியம். இது ஆரம்பத்தில் கடினமாக இருக்கும் அதுமட்டுமின்றி இதற்கு சில செலவுகளும் ஏற்படும். ஆனால் அதை செய்து முடிப்பது எமது பணிகளை பயமின்றி ஆற்றமுடிவதுடன் வீண் ஆபத்துகளை தடுக்க முடியும். அதுமட்டுமின்றி அனாவசியமாக ஆபத்து நிறைந்த இடங்களிற்கு சென்றுவருவதை தவிர்த்தல் முக்கியமானது. மாகாணங்களுக் கிடையிலான போக்குவரத்துகளை அவசிய தேவைகளுக்காக சுயமாக மட்டுப்படுத்துதல் பெரும் உதவியாக இருக்கும். நாம் எமது பிரதேசத்தினுள் ஒரு தொற்றை கொண்டு வருபவராக இருக்கக் கூடாது என்பதில் நாம் எல்லோரும் கவனமாக இருத்தல் வேண்டும். நாம் எம் சமூகப்பொறுப்பை உணர்ந்து நடப்பதுதான் ஏனையவர்கள் அவ்வாறு நடந்துகொள்வதையும் உறுதிப்படுத்தல் வேண்டும். எமது பிரதேசத்தினுள் புதிதாக வருபவர்கள் பற்றிய விழிப்புணர்வும் முக்கியமானது. கடந்த வாரம் மன்னாரில் ஒரு தந்தை தனது பிள்ளையுடன் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இங்கு வருகை தந்து பொலீசாரிடம் சரணடைந்து தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்திக்கொண்டமை ஒரு நல்ல உதாரணம். கடல்வழியாக வேறும் பலர் வர எத்தனிக்கலாம் ஆனால் அவர்களில் பலர் இத் தந்தையைப் போன்று நடந்துகொள்ள மாட்டார்கள். அவர்கள் தனிமைப் படுத்தல் மற்றும் சட்டப் பிரச்சனை காரணமாக சமூகத்தில் மறைந்திருக்கக்கூடும் அவர்களை பொறுப்புடன் நடக்க தூண்டுவது எமது கடமையாகும்.

எனவே சவால்கள் தொடரும் இக்கால கட்டத்தில் எமது பொறுப்புணர்ந்து சமூகப்பொறுப்புடன் புதிய இயல்பு வாழ்க் கைக்கு எம்மை பழக்கப்படுத்துவதுடன் சமூகத்தையும் அவ்வாறு செய்ய தூண்டுவதும். ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகுக்கும்.

# 13 மக்களின் நடத்தைப்பாங்கு மாற்றமும் வடக்கின் கொரோனா கட்டுப்பாடும்

உலகலாவிய கொரோனா தொற்று கடந்த வாரம் அதிகரித்த நிலைமையில் காணப்பட்ட துடன் ஒரு கோடியையும் தாண்டி சென்றுள்ளதுடன் அரை மில்லியனிற்கு மேலான இறப்புகளையும் தாண்டி உலகை ஒரு இறுக்கமான கட்டுப்பாட்டு நிலைமையில் வைத்துள்ளது. இதனால் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது உலகம் தடுமாற்றத்துடன் காணப்படு கின்றது. உலக மருத்துவ ஆராய்ச்சிகள் எல்லாம் இதற்கான தடுப்பூசியை கண்டுபிடிப்பதில் முனைப்பு காட்டிவருகின்றன. இதன் வெற்றியில் தான் வழமையான உலக செயற்பாடுகளை பயமின்றி செய்வதற்கு வழியேற்படும் என்ற நம்பிக்கையும் ஊட்டப்படுகிறது. தடுப்பூசியின் வெற்றி அது உலகில் எத்தனை வீதமான மக்களுக்கு உடனடியாக வழங்கக்கூடிய தன்மை. இதனால் உலக மக்களிடையேயும் நாடுகளுக்கிடையேயும் ஏற்படக்கூடிய அரசியல் பொருளாதார பிரச்சனைகள் பற்றி இன்று உலகலாவிய ரீதியாக பேசப்படும் பொருளாக மாறிவிட்டது. எப்போதும் மருத்துவ உலகில் மருந்துகள் பற்றிய கவனம் செலுத்தப்படும் அளவிற்கு மக்களின் நடத்தை பாங்கில் மாற்றம் கொண்டுவருவதில் செலுத்தப்படுவதில்லை. நவீன மருத்துவத்தில் மருத்துவ பரிசோதனைகளும் மருந்துகளும் மருத்துவ செலவீனத்தை வானளவாக உயர்த்துவதற்கு காரணமாக அமைந்து விட்டன. நாமும் அதனை கைக்கொள்ளவதில் உள்ள இலகு தன்மை காரணமாக எதுவித தயக்கமும் இன்றி அவ்வழியினை நாட தலைப்பட்டு விட்டோம்.

இதனால் இவ் நோய்கள் எமக்கு எவ்வாறு ஏற்படுகின்றன அதனை ஏற்படுத்தும் காரணிகள் என்ன நாம் அக்காரணிகளையும் நோய்களையும் தடுக்க என்ன வகையான பழக்கவழக்கங்களை

கைக்கொள்ள வேண்டும் என்பதை பற்றி சிந்திப்பதேயில்லை அதுமட்டுமின்றி எமது மருத்துவ சேவைகளும் அதனை கட்டுப்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்காது நோயை கண்டு பிடிப்பதற்கும் அதனை குணப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் தன்மையுடையதாக மாற்றம் அடைந்துவிட்டது.

கொரோனா போன்ற உலகலாவிய கட்டுக்கடங்கா தொற்றை ஏற்படுத்தும் நோய்களை கையாளவும் பயன்படுத்த விருக்கின்றோம். உலகம் ஆரம்பத்தில் கொரோனாவை கட்டுப்படுத்த அதனை ஏற்படுத்தக்கூடிய காரணிகளை இல்லாமை செய்வதில் உதவக்கூடிய ஒன்றுகூடலை தவிர்த்தல். சமூக இடைவெளியை பேணுதல், கைகளை நன்றாக கழுவுதல், சுவாச சுகாதார பழக்க வழக்கங்களை கைக்கொள்ளுதல், முகக்கவசத்தை அணிதல் போன்ற நடவடிக்கைகளை கையாண்டது. இப்போதும் அதனை நடை முறைபடுத்த விளைகின்றது. ஏனெனில் இதற்கு சரியான சிகிச்சைக்குரிய மருந்து அல்லது தடுப்பூசி இல்லாமை யாகும். இதனை நடைமுறைப்படுத்த அநேகமாக இருவழிகளை கையாள்வார்கள். ஒருவழி மக்கள் தாமாக உணர்ந்து தமது இவ்வாறான நோயை தடுக்கக்கூடிய மேற்சொன்ன முறைகளை கைக்கொள்ள பழகி அதனை தமது அன்றாட நடவடிக்கைகளுடன் இணைத்து செயற்படுதல் அல்லது இதனை சமூகப்பிரச்சனையாக கருதி சட்டங்களை இயற்றி கட்டுப்படுத்தல். சிலவேளைகளில் மக்களின் நடத்தையில் மாற்றம் ஏற்படுத்துவதற்காக சட்டங்களை ஆரம்பத்தில் பயன்படுத்தி பின்னர் மக்களை நடத்தைமாற்றத்திற்கு உட்படுத்துதல்.

இதில் சில நாடுகள் மக்களில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த விழைந்ததுடன் நோய்க்கு சிகிச்சையளிக்கும் நடை முறையை கையாண்டனர். சில நாடுகள் முடக்குதலுடன் சமூகமாற்றத்தை ஏற்படுத்த விழைந்தனர் சிலநாடுகள் ஊரடங்கு சட்டத்துடன் கூடிய முடக்குதலுடன் சமூகமாற்றத்தை ஏற்படுத்துதல். இலங்கை மூன்றாவது முறையை கடைப்பிடித்து

கொரோனவை கட்டுப்படுத்துவதில் ஓரளவு வெற்றியையும் கண்டது.

முடக்குதல் நடவடிக்கைகளுக்கு தாமதித்த நாடுகளில் கொரோனா தடுப்பு பெருமளவு வெற்றியளிக்காமல் போனதுடன் அதனை கட்டுப்படுத்த இன்னும் திணறுவதை அவதானிக்க முடிகிறது. இலங்கையை பொறுத்தவரை ஊரடங்குடன் கூடிய முடக்குதல் உடனடியாக நோயைக்கட்டுப்படுத்த உதவினாலும் அதனை தொடர்ந்து நடைமுறைப்படுத்த முடியாது தற்போது சகல நடவடிக்கைகளிலும் தளர்வுகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன. ஆனால் துரதிஸ்டவசமாக கடந்த மூன்று மாதத்திற்கும் மேலாக எடுக்கப்பட்ட நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தவேண்டிய நடவடிக்கைகள் மக்களில் எதிர்பார்க்கப்பட்ட மாற்றத்தை கொண்டுவர தவறியதுடன் பெரும்பாலான மக்கள் மத்தியில் இவை ஒரு தேவையற்ற நடவடிக்கைகள் என்ற எண்ணப்பாடு பெரும் பாலான மக்கள் மத்தியில் ஏற்பட்டுஇருப்பதை அவதானிக்க முடிகிறது இது ஒரு ஆபத்தான நிலைக்கு இட்டு செல்லக்கூடும். இதனை சுகாதாரப்பணிப்பாளரும் மற்றும் பொறுப்புள்ள அதிகாரி களும் தொடர்ந்து வலியுறுத்தி வருவதுடன் அதனை சட்டத்தினை கொண்டு நடைமுறைப்படுத்த விளைகின்றனர். இது எவ்வளவு தூரம் எங்கள் மக்களை கொரோனாவில் இருந்து காப்பாற்றும் என்பதில் ஐயம் உள்ளது.

பொதுவாக இன்று அலுவலகங்கள் தொடங்கி, பாடசா லைகள், தனியார் வகுப்புகள், ஆலயவழிபாடுகள், கல்யாணவீடுகள், பல்பொருளங்காடிகள், சந்தைகள் என அநேகமக்கள் கூடும் இடங்களின் தொழிற்பாடுகள் முழுமையாக ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன் அதனை எவ்வாறு கொரோனவுடனான புதிய வழமைக்கு ஏற்ப கையாளவேண்டும் என வழிகாட்டுதல்களும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டாலும் அதனை கைக் கொள்ளவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் உரியவர்கள் அதிக சிரமத்தை எடுக்காமல் இருப்பதுடன் சிலவேளைகளில்

ஏனோதானோ என செயற்படுவதும் சிலர் ஒருபடி மேலே போய் இவைஉண்மையாக இவை தேவைதானா இவ் நடவடிக்கை களால் வீணாக பொருளாதார செலவுகள் ஏற்படுவதுடன் நேரவீண் விரையமும் ஏற்படுவதாக கருதுகிறார்கள். திருமணமண்டபங்களில் அனுமதிக்கப்பட்ட அளவினரை விட அதிகமானவர்களை இயன் றளவு அனுமதிப்பதுடன் உணவு பரிமாறும் பொது சுயஉணவு பரிமாறுதலை தவிர்க்கும்படி கூறினாலும் அதனை கைக் கொள்வதை அவதானிக்கமுடிகிறது. முன்னர் வைபவங்களில் விருந் தினரை அழைத்துவந்து பந்தியில் உட்காரவைத்து உபசரித்து அவர்களின் உடல் குளிர உணவுவழங்கி அனுப்புதல் தான் எமது பண்பாடு ஆனால் திருமணமண்டப கலாச்சாரத்தில் தற்போது வந்தவர் உணவு உண்டாரா இல்லையா என்பதை கவனிப்பதற்கு ஆட்கள் இல்லாது வந்தவர்கள் தங்கள் எண்ணப்படி உணவை யுண்டுசெல்ல உறவினர்கள் மணவறையில் வீடியோகமராவில் படமெடுக்க முண்டியடிப்பது தற்போதைய கலாச்சாரமாக மாறி விட்டது. சுயமான உணவு பரிமாறுதல் பரிமாறும் கரண்டிகளை எல்லோரும் தொடும்போது அது எவ்வாறு மற்றவர்களுக்கு பரவும் என்பதை ஜப்பானில் ஒரு ஆய்வின்மூலம் காட்டியுள்ளார். இதனை நடைமுறைப்படுத்துவதில் கவனமில்லாமல் இருப்பது சமூகம் கொரோனா தடுப்பில் எவ்வளவு அக்கறையாக உள்ளார்கள் என்பதற்கு ஒரு நல்ல உதாரணம்.

இன்னொரு முக்கியமான விடயம் என்னவெனில் மீளஆரம்பிக்கப்படும் தனியார்கல்விநிலையங்கள். இலங்கை கல்வித்துறையை பொறுத்தவரை தற்போது பெற்றோர்களும் மாணவர்களும் பெரிதும் பாடசாலைகளை விட தனியார் கல்வி நிலையங்களை நம்பும் கலாச்சாரம் வேரூன்றிவிட்டதை மறுக்க முடியாது இதன் சாதக பாதக பலன்களை ஆராய்வது முக்கிய மானது. அதனை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு. இங்கே கவனிக்க வேண்டியது இவ் நிலையங்களில் காணப்படும் வசதிகள். அநேகமான நிலையங்களில் தேவையான சுகாதார வசதிகள் எதுவும் சரியாக வழங்கப்படுவதில்லை. வடமாகாணத்தை பொறுத்த வரை

இவ் நிலையங்கள் மிகவும் குறைந்தளவு வசதிகளுடன் காணப் படுவதுடன் இவ் வசதிகளை கண்காணிப்பதற்குரிய சட்டங்களோ நடைமுறைகளும் இல்லாத நிலைமையில் இவற்றின் நடவடிக் கைகளை ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் நடைமுறைப்ப டுத்துவதில் பெருமளவு சிக்கல் காணப்படுகின்றது. இங்கு வருகைதந்த ஒருமாணவரிற்கு அல்லது அவரது குடும்ப உறுப் பினருக்கு கொரோனா தொற்று ஏற்படின் அவ் நிலையத்திற்கு வந்த சகலரையும் தனிமைப்படுத்தவேண்டும். இவ் ஆபத்தினை இவற்றை நடாத்துபவர்களோ அல்லது அங்குவரும் மாணவர்களோ பெற்றோர்களோ எவ்வளவு தூரம் கவனத்தில் கொண்டுள்ளார்கள் என்பது கேள்விக் குறியானது. அத்துடன் கொரோனா முடக்கங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இணையவழி கற்பித்தல் செயற்பாடுகளை படிப்படியாக நிறுத்தப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது.

இது கொரோனா தொற்றின்காரணமாக பழகிக்கொண்ட நவீனஉலகின் சில நல்ல பழக்கவழக்கங்களையும் மிகவிரைவாக மறந்துவிட்டு பழைய நடவடிக்கைகளுக்கு செல்வது எமது எதிர்கால மாணவர்களை எதிர்கால உலகிற்கு தயார்படுத்தும் நடவடிக்கைகளில் இருந்து விலகுவதுடன் தொடர்ந்து பழைய நடவடிக்கைகளை கைக்கொள்ளுவதன் ஊடாக முற்போக்கு சிந்தனையுடைய எதிர்கால உலகிற்குரிய மாணவர்களை உருவாக் குவதில் தவறுவதுடன் அவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் நடவடிக்கையாகும்.

எனவே கொரோனா கற்றுத்தந்த பாடங்களை கருத்தில்கொண்டு அதனை எமது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் பொறுப்புடன் செய்வதன் ஊடாக மட்டுமே இனியொரு தொற்று ஏற்படாது எம்மை பாதுகாக்கும்